வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 03.01.2024 புதன்கிழமை இதழ் : 03 பக்கங்கள் : 12

## யாழில் டெங்கு உச்சமடைந்த பின்பே கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் தீவிரம்!

### மருத்துவபீட பீடாதிபதி கவலை

யாழ்ப்பாணம், ஜன. 03

யாழில் டெங்கு உச்சத்தை தொட்ட பின்னர் தான் கட்டுப்படுத்த முனைகின்றோம் என சமுதாய மருத்துவ நிபுணரும் யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் பீடாதிபதியுமான மருத்துவர் சுரேந்திரகுமாரன் கவலை வெளியிட்டுள்ளார்.

டெங்கு கட்டுப்படுத்தல் தொடர்பில் கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போதைய காலப் பகுதியில் டெங்கு மற்றும் சுவாசம் சம்பந்தமான நோய்கள் மக்கள் மத்தியில் பரவி வருகின்றது. முக்கியமாக டெங்கு நோய் யாழ்ப்பாணத்தை அண்மித்த பகுதிகளில் 11

## சஜித்துடன் இணைவது உறுதியான முடிவல்ல!

கொழும்பு, ஜன. 03

எதிர்க்கட்சி கூட்டணியில் இணைவது குறித்து இதுவரை எந்த முடிவும் எடுக்கவில்லை என பொதுஜன பெரமுனவில் இருந்து விலகிய பாராளுமன்ற உறுப்பினரான டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து செயல்படுவதற்கான தமது உறுதிப்பாட்டை வெளிப்படுத்தும் அதே வேளை, நாங்கள் உத்தியோகபூர்வமாக கட்சியில் இணையவில்லை என அவர் கூறினார்.

அண்மையில் பொதுஜன பெரமுன அரசாங்கத்தில் இருந்து பிரிந்த பாராளுமன்ற உறுப்பினர்களான டலஸ் அழகப்பெரும, பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் மற்றும் டிலான் பெரேரா 11

## மதுபானசாலையை அகற்றுமாறு உடுப்பிட்டியில் இன்று கடையடைப்பு

வடமராட்சி, ஜன. 03

மக்களின் எதிர்ப்பை மீறி மீளத் திறக்கப்பட்ட மதுபானசாலையை அகற்றுமாறு வலியுறுத்தி இன்று புதன்கிழமை உடுப்பிட்டியில் கடையடைப்பும் கண்டன ஆர்ப்பாட்டமும் நடைபெறவுள்ளன.

இமையாணன் மேற்கு விநாயகர் சனசமூக நிலையத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஒன்றுகூடிய உடுப்பிட்டியை சேர்ந்த 21 சமூகமட்ட அமைப்புகள் இந்தப் போராட்டங்களை நடத்தத் தீர்மானித்தன. இந்தத் தீர்மானத்துக்கு உடுப்பிட்டியில் இயங்கும் வர்த்தக நிலையங்கள், கடைகள், தனியார் கல்வி நிலையங்கள் மற்றும் சந்தை வியாபாரிகள் ஆதரவு தெரிவித்தனர். அத்துடன், இலங்கை தமிழரசு கட்சியின் உடுப்பிட்டி தொகுதி கிளையினரும் 11

## யாழில் டெங்கு தீவிரம்

யாழ்ப்பாணம், ஜன. 03

"யாழ். மாவட்டத்தில் கடந்த டிசெம்பர் மாதமே அதிகளவான டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்" என யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் மருத்துவர் த. சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த டிசெம்பர் மாதம் பெய்த தொடர்ச்சியான மழை காரணமாக யாழில் டெங்கு பரவல் அதிகரித்து வருகின்றது.

யாழ். மாவட்டத்தில் கடந்த டிசெம்பர் மாதமே அதிகளவான டெங்கு நோயாளர்கள் சிகிச்சை பெற்றுள்ளதுடன் 11

# பருத்தித்துறை தீ விபத்தில் மலையக சகோதரர்கள் பலி

## பொலிஸ் விசாரணைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜனவரி 03

**பருத்தித்துறை பகுதியில் அமைந்துள்ள களஞ்சியசாலை ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் இருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.**

**பருத்தித்துறை - முனைப்பகுதியில் அமைந்துள்ள கடற்றொழில் உபகரண களஞ்சியசாலை ஒன்றிலேயே நேற்று அதிகாலை இவ்வாறு தீ விபத்து ஏற்பட்டுள்ளது.**

புத்தாண்டு கொண்டாட்டத்தில் ஈடுபட்ட இருவரும் களஞ்சியசாலைக்கு சென்று கதவைப் பூட்டி விட்டு நித்திரைக்கு சென்றபோதே நள்ளிரவு 12.30 மணியளவில் தீ விபத்து ஏற்பட்டது.

இதனையடுத்து அருகில் இருந்தவர்கள் தீயை அணைக்க முற்பட்ட போதும், களஞ்சிய சாலையில் உறக்கத்தில் இருந்த இருவரும் உடல் கருகி பலியாகினர்.

அத்துடன், அங்கிருந்த பொருட்களும் தீயில் எரிந்ததால் அருகில் இருந்த வாகன தரிப்பிடத்திலும் தீ பரவி சேதமடைந்தது.



மலையகத்தின் உடப்புசல்லாவை பிள்ளையார் லோமன் தோட்டத்தைச் சேர்ந்த சகோதரர்களான 11

## இந்த ஆண்டில் 3 வீதம் பொருளாதார வளர்ச்சி

கொழும்பு, ஜன. 03

2024 ஆம் ஆண்டில் 3 வீத பொருளாதார வளர்ச்சியை எதிர்பார்க்க முடியுமென மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் ஊடக பிரிவால் ஏற்பாடு செய்யப்பட்ட "2024 மற்றும் நாட்டின் பொருளாதாரம்" எனும் விசேட கலந்துரையாடலில் கலந்துகொண்டு கருத்துரைக்கும் போதே அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

அத்துடன், நாட்டின் பணவீக்கத்தை 5 வீதமாக பேணுவதற்கு எதிர்பார்ப்பதாகவும் மத்திய வங்கியின் ஆளுநர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, மூன்று வீத பெறுமதி சேர் வரி அதிகரிப்பின் மூலம் முறையற்ற வகையில் பொதுமக்களை பயன்படுத்த வேண்டாமென நிதி அமைச்சின் செயலாளர் மகிந்த சிறிவர்த்தன வர்த்தக சமூகத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார். (அ)

## குடும்பத்தோடு தற்கொலை செய்யும் நிலையில் மக்கள்!

### எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 03

பிள்ளைகளுக்கு சரியாக உணவுகளை வழங்கவும் வீட்டுத் தேவையை பூர்த்தி செய்யவும் முடியாமல் தற்கொலை செய்து கொள்ளும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இந்த அவலத்தை மேலும் ஊக்குவிக்கும் ஓர் ஆட்சியே தற்போது உருவாகியுள்ளது. பெறுமதி சேர் வரி அதிகரிப்பால் இந்நிலை மேலும் அதிகரித்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். 11

## சுகாதார நடைமுறைகளை மீண்டும் பின்பற்றவேண்டும்

### அமைச்சர் ரமேஷ் பத்திரண கோரிக்கை

கொழும்பு, ஜன. 03

இந்தியாவில் பதிவாகியுள்ள ஜே.என். 1 புதிய கோவிட் பிறழ்வு தொடர்பில் சுகாதார அமைச்சு தொடர்ந்து அதானத்துடன் இருப்பதாகவும், இதுவரை நடத்தப்பட்ட மாதிரிப் பரிசோதனைகளில் இலங்கையில் எந்த ஒரு நோயாளியும் பதிவாகவில்லை என்றும் கைத்தொழில் மற்றும் சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

இருப்பினும், கடந்த கோவிட் பரவலின்போது பின்பற்றிய முறையான சுகாதார நடைமுறைகளை மீண்டும் பின்பற்றுமாறு பொதுமக்களை கேட்டுக் கொள்வதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

மேலும், தற்போது நாட்டில் மீண்டும் பரவ ஆரம்பித்திருக்கும் தட்டம்மை நோயை கட்டுப்படுத்துவதற்காக தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை அடுத்த வாரம் முதல் நாடு முழுவதுமுள்ள 11

## சிறுபான்மை கட்சிகளுடன் பேச்சை ஆரம்பித்துள்ளார் தம்மிக்க பெரேரா

கொழும்பு, ஜன. 03

சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்கும் நோக்கத்துடன் காய் நகர்த்தும் பிரபல வர்த்தகர் தம்மிக்க பெரேரா, சிறுபான்மை கட்சிகளுடன் அரசியல் கலந்துரையாடல்களை ஆரம்பித்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

"எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் இரண்டு தமிழ் கட்சிகள் மற்றும் ஒரு முஸ்லிம் கட்சி தலைவர்களுடன் கலந்துரையாடியுள்ளேன். பேச்சுகள் வெற்றிகரமாக முடிந்துள்ளது. இது பற்றிய கூடுதல் விவரங்களை தற்போது தெரிவிக்க முடியாது" எனவும் அவர் கூறியுள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளராக களமிறங்கும் நோக்கில் வர்த்தகர் தம்மிக்க பேரேரா அக்கட்சியின் முன்னாள் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்சவுடன் பேச்சுகளை முன்னெடுத்து வருகிறார். 11

## பழுதடைந்த உருளைக்கிழங்கு விதைகளை புதைக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 03

பழுதடைந்த உருளைக்கிழங்கு விதைகளை கிளிநொச்சி வனவளத் திணைக்களத்துக்கு சொந்தமான காட்டுப்பகுதியில் உரிய நடைமுறைகளை பின்பற்றி புதைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குப்பிழான் களஞ்சியசாலையில் இருந்து நேற்று செவ்வாய்க்கிழமை உருளைக்கிழங்கு விதைகளை பொதி செய்து வாகனத்தில் ஏற்றும் பணி முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் - குப்பிழானில் உள்ள களஞ்சிய 11

# இப்படியும் நடக்கிறது

எழுபதுகளில் வெளிவந்த தமிழ் திரைப்படம் ஒன்றில் பிரபல நடிகரும் பத்திரிகையாளருமான சோ நடித்த பாத்திரம் ஒன்று, அந்தச் செய்தியை அறிந்தபோது ஞாபகத்திற்கு வந்தது.

சிவாஜி கணேசன் நடித்த 'தங்கப் பதக்கம்' என்ற திரைப்படத்தில் சோ இரண்டு வேடத்தில் நடித்திருப்பார். ஒரு சோ பொலிஸ் கான்ஸ்டபிளாக நடிக்க, மறுவேடத்தில் ஓர் உள்ளூர் அரசியல்வாதியாக நடித்திருப்பார்.

அந்த அரசியல்வாதி அப்போது அரசியலுக்கு வந்து ஒரு மாநகர கவுன்சிலர் ஆகியிருப்பார்.

அவர் தேர்தலுக்காக பிரசாரக் கூட்டம் ஒன்றில் பேசுகின்றபோது சொல்லுவார்:

'அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கும் நான் எச்சரிக்கை விடுக்கின்றேன். நான் ஆணையிட்டால் உங்கள் நாட்டில் பூகம்பம் வெடிக்கும்.' என்பார்.

அப்போது உலகம் இரு துருவங்களாக அமெரிக்கா- ரஷ்யா என்று பிரிந்து கிடந்த காலம். அவரோ இந்த இரண்டு பிரிவின் தலைமைக்கும் எச்சரிக்கை விடுப்பார் என்றால் அதைக்கேட்க எப்படி சிரிப்பு வரும் என்று பார்த்துக்கொள்ளுங்கள்.

உலகின் சுப்பர் பவர்களுக்கு சென்னை மாநகர கவுன்சிலர் எச்சரிக்கை விடுக்கிறார் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.

அந்த ஊடகவியலாளர் தொடர்ந்து தொலைபேசி அழைப்பை எடுத்துக்கொண்டே இருந்தார். எனக்கோ அதனை ஏற்றுக்கொள்ள முடியாத நிலை.

ஒரு தடவை அழைப்பை எடுத்து மறுமுனையில் இருப்பவர் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை என்றால் என்ன அர்த்தம்? ஒன்று அவர் அந்த நேரத்தில் கதைக்கக்கூடிய நிலையில் இல்லை. அல்லது அவர் அந்த நேரத்தில் கதைக்க விரும்பவில்லை என்பதுதானே.

ஒருதடவை அழைத்துப் பார்த்து அவர் எடுக்கவில்லை என்றால் சில மணி நேரங்கள் கழித்து வேண்டுமானால் திரும்ப அழைத்துப் பார்க்கலாம். ஆனால், திரும்பத் திரும்ப ஒரேநேரத்தில் ஒருவர் அழைப்பை எடுத்துக்கொண்டே இருந்தால் அவர் தொடர்பு இலக்கத்தையே 'புளொக்' பண்ணிவிடுவதுதான் நான் செய்கின்ற முதல் வேலை. ஆனால், அந்த ஊடக நண்பரை அப்படி செய்யவும் முடியவில்லை.

மறுநாள் அவர் மீண்டும் அழைத்தபோதுதான் பதிலளிக்க முடிந்தது. அப்போது அவர் கேட்டார், 'இந்த தமிழரசு தலைவர் தேர்தலில் அமெரிக்கா ஒருவருக்கு ஆதரவாக இருக்கின்றதாமே. நீங்கள் அறிந்தீர்களா?'.

எனக்கு சிரிப்பதா அல்லது அந்த ஊடகரை நினைத்து அழுவதா என்று தெரியவில்லை. அவருக்கு அந்த சோவின் வசனத்தை ஞாபகப்படுத்திவிட்டு, கேட்டேன், 'உமக்கு ஏன் இந்த சந்தேகம் இப்போது வந்தது என்று?'.

'இல்லை இல்லை, அவர் தனக்கு வாக்களிக்குமாறு கட்சி உறுப்பினர்கள் மத்தியில் பிரசாரம் செய்த போது, இதனைக் கூறினாராம். தான் தலைவராக வருவதையே அமெரிக்கா விரும்புகின்றது என்றும் அப்படி தான் தலைவராக வந்தால், நமது பிரச்னைக்கு தீர்வு காண உதவுவதாகவும் அமெரிக்கா உறுதியளித்திருப்பதாகவும் கூறினாராம். அதுதான் கேட்டேன்' என்றார் நண்பர்.

நான் சொன்னேன், 'தனது கட்சிக்காரர்களைப் பற்றி அவர் எவ்வளவு மட்டகரமாக நினைத்துக் கொண்டிருக்கிறார் என்பதற்கு இதைவிட விளக்கம் தேவையில்லை' என்றேன் நான்.

இலங்கைத் தமிழர் பிரச்னையை சர்வதேச சமூகம் அது இந்தியாவாக இருந்தாலும் சரி அமெரிக்கா, கனடா, பிரிட்டனாக இருந்தாலும் சரி தத்தமது நலன்களை நிறைவு செய்யத்தான் பயன்படுத்துகிறார்கள் என்பதை கடந்த காலங்களில் கண்டோம். அதில் சற்று விதிவிலக்காக, இந்தியா தனது நலனை முன்னிறுத்தினாலும், ஒரு சிறிய ஆறுதலாக - மாகாண சபைகளையாவது பெற்றுத் தந்திருக்கின்றது. ஆனால், மற்ற எந்த நாடுமே தமது நலன்களை அடைவதைத் தவிர வேறு எதனையும் இதுவரை செய்ததாக இல்லை.

தங்களை மனித உரிமை காவலர்களாக காட்டிக்கொள்ளும் மேற்குலக நாடுகள் ஜெனிவாவில் எமக்கு எதை இதுவரை பெற்றுத் தந்தது என்பதையும் நாம் பார்த்துக் கொண்டுதானே இருக்கின்றோம்.

அதிகம் ஏன், நமது தமிழரசின் பேச்சாளர் ம. ஆ. சுமந்திரன் இங்கிருந்து மூன்று சட்டமேதைகளையும் அழைத்துக்கொண்டு அமெரிக்கா சென்று வந்தார். இருபத்தியோராம் ஆண்டு கடைசியில் அங்கு சென்றுவந்த அவர், அடுத்த ஆண்டு ஆரம்பத்தில்- அதாவது, இருபத்தி இரண்டு ஆரம்பத்தில் அமெரிக்கா விளையாட்டைக் காட்டவிருக்கின்றது. தமிழ் மக்கள் தீர்வை அடையப்போகின்றார்கள் என்றார். தமிழ் மக்களுக்கு எதுவும் கிடைக்கவில்லை. அமெரிக்கா தனக்கு விரும்பிய ஒருவரைத்தான் தமிழரசின் தலைவராக்க முயற்சிக்கிறது என்பது, அதுவும் ஒருவர் தன்னையே தலைவராக்க விரும்புகின்றது என்பது கொஞ்சம் ஓவர்.

சிலவேளை அவர் தலைவராக வந்தால்தான் தாங்கள் விரும்பிய ஒருவரை ஜனாதிபதி ஆக்குவதற்கு தமிழர்களின் உதவியைப் பெறலாம் என்று அமெரிக்கா விரும்பினாலும் அதற்காக அமெரிக்கா நேரடியாக தலையிடப்போவதில்லை.

தனது விருப்பத்தை இந்தியா ஊடாகவே அது செய்யும் என்ற சாதாரண அரசியல் அரிவரி கூடவா தமிழரசு உறுப்பினர்களுக்கு தெரியாமல் இருக்கப்போகின்றது.

அதுகும் தமிழரசின் சொல்லை தமிழ் மக்களே இனி கேட்பார்களா என்ற சந்தேகம் தமிழ் மக்களுக்கே இப்போது வந்தவிட்டதே.

அந்த தலைமைப் பதவியில் யார் அமரவேண்டும் என்பதை தமிழரசு தொண்டர்கள் என்ன முடிவை எடுத்திருக்கிறார்களோ தெரியவில்லை. ஆனால், நமது பக்கத்து நாடு முடிவெடுத்து விட்டதாம். அவர்களின் தெரிவுக்கு ஆங்கில அறிவோ, சட்ட அறிவோ தேவையில்லைத்தானே. அவர்களைப் பொறுத்தவரை யார் சொல்வதை மக்கள் கேட்பார்கள் என்பதுதான் முக்கியமானது என்பது நமக்கும் தெரிந்ததுதான்.!

**- ஊர்க்குருவி.**

# வர்த்தக சமூகத்தினருக்கு நம்பிக்கை ஏற்பட்டுள்ளது

கொழும்பு, ஜன. 03

நாட்டின் பணவீக்கத்தை தனி பெறுமதியில் பேணுவதால் வர்த்தகச் சமூகத்தினர் மத்தியில் நம்பிக்கையைக் கட்டியெழுப்ப முடிந்திருப்பதாக நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

2023ஆம் ஆண்டு, மொத்த தேசிய உற்பத்திக்கு நிகராக 11.2 வீதம் காணப்படுவதாகவும் 2026 ஆம் ஆண்டில் அதனை 15 தம்வீதம் வரையில் அதிகரித்துக்கொள்ள எதிர்பார்ப்பதாகவும் கூறினார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த நிதி இராஜாங்க அமைச்சர்,

இந்நாட்டின் பொருளாதார வளர்ச்சி 2023ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் 1.7 வீதம் ஆக இருந்தது. அது 2023இல் முழுமையான பொருளாதார வளர்ச்சியில் மறை 3 வீதம் ஆகும். அதன்படி, 2022 இல் முழுமையான பொருளாதார வளர்ச்சி -11 வீதம் ஆகும்.

மேலும் முதன்மை கணக்கு இருப்பு தொடர்ந்தும் நேர்மறை பெறுமானத்தில் உள்ளது. 2022 ஆம் ஆண்டில், இது 895 பில்லியன் ரூபா எதிர்மறை பெறுமானத்தில் இருந்தது. இது நவம்பர் மாத நிலவரப்படி 333 பில்லியன் ரூபாய் என்ற நேர்மறையான எண்ணிக்கையாகும்.

மேலும், சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாவது தவணையைப் பெற்ற பின்னர், வெளிநாட்டுக் கையிருப்பு 04 பில்லியன் அமெரிக்க டொலர்களைத் தாண்டியுள்ளது. சர்வதேச நாணய நிதியத்திலிருந்து 337 மில்லியன் அமெரிக்க டொலர்கள், ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து 220 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மற்றும் உலக வங்கியிடமிருந்து 250 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கிடைத்துள்ளன.

மேலும் பணவீக்கத்தை ஒற்றை இலக்கத்தில் பேணவும் முடிந்துள்ளது. 2022 இல் பணவீக்கம் 70 வீதம் ஆக இருந்தது. இது 2024 இல் 5வீதம் அளவில் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நாட்டில் வணிக நம்பிக்கையை வளர்ப்பதற்கு இது ஒரு முக்கிய காரணமாகும்.

மேலும் 2023 ஆம் ஆண்டில் அரச வருமானம் 3110 பில்லியன் ரூபாயாகும். அதன்படி, 2023 ஆம் ஆண்டின் திருத்திய மதிப்பீடு 2850 பில்லியன் ரூபாயாகும். மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் ஒப்பிடுகையில் இது அரசின் வருமானத்தில் 11.2 வீதம் ஆகும். 2026 இல் 15 வீதம் வளர்ச்சியை எட்ட வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

இந்நாட்டு வரி கோப்பு எண்ணிக்கையின் வளர்ச்சி 2019இல் பதிவு செய்யப்பட்ட மொத்த வரி செலுத்துவோர் எண்ணிக்கை 1,705,233 ஆகும். பல்வேறு கொள்கை ரீதியிலான முடிவுகளால், 2020 இல் 677,613 ஆகக் குறைந்துள்ளது. 2021 இல், அது 507,085 ஆக இருந்தது. 2022 இல் 437,547 ஆக இருந்த வரிக் கோப்புகளின் எண்ணிக்கையை ஒரு மில்லியனாக அதிகரிக்க முடிந்துள்ளது.

மேலும், நிலுவையில் உள்ள அனைத்து கொடுப்பனவுகளும் செலுத்தப்பட்டுள்ளன. தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த போது 350 பில்லியன் ரூபாவிற்கும் அதிகமான கட்டணங்கள் செலுத்தப்படாமல் இருந்தன. 2023 டிசம்பர் 15, ஆகும் போது, அங்கீகரிக்கப்பட்ட அனைத்து திட்டங்களுக்கான கொடுப்பனவுகளையும் முழுமையாக செலுத்த முடிந்துள்ளது.

2024 முதல், ஒரு மாதத்திற்கு மேல் பணம் செலுத்துவதில் தாமதம் ஏற்படாத வகையில் கொள்கை ரீதியான இணக்கப்பாட்டுடன் அரசாங்கம் செயல்பட்டு வருகின்றது. மேலும், 2024ஆம் ஆண்டிற்கான அஸ்வெசும கொடுப்பனவுகளுக்கான விண்ணப்பங்கள் ஜனவரி இறுதியில் அல்லது பெப்ரவரி மாதம் ஆரம்பத்தில் கோரப்படவுள்ளன. 1,410,064 பேருக்கு டிசெம்பர் மாத கொடுப்பனவையும் எம்மால் செலுத்த முடிந்தது.

20 இலட்சம் பேருக்கு இந்த நிவாரணங்களை வழங்குவதே எமது இலக்கு. 2023 ஆம் ஆண்டில் ஏற்பட்ட சில குறைபாடுகளைத் தவிர்த்து நிவாரணங்களைப் பெற வேண்டிய குழுவைக் கண்டறிந்து அவர்களுக்கு சலுகைகளை வழங்க அரசாங்கம் தயாராகி வருகிறது.-என்றார். (அ)

# சுகாதார ஊழியர்களுக்கு எதிராக 600 முறைப்பாடு

## பிரச்னைகளுக்கு விரைவில் தீர்வு

கொழும்பு, ஜன. 03

வைத்தியர்கள் உள்ளிட்ட சுகாதார ஊழியர்களுக்கு எதிராக வருடாந்தம் சுமார் 600 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டு வருவதாக சுகாதார அமைச்சர் ரமேஷ் புத்திரன் தெரிவித்துள்ளார்.

பேராதனை போதனா வைத்தியசாலையில் அண்மையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துரைக்கையிலே அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

அரச வைத்தியசாலைகளில் நோயாளர்களுக்கான சிகிச்சைகளை வழங்குவதில் வைத்தியர்கள் மற்றும் ஏனைய சுகாதார ஊழியர்கள் அலட்சியம் காட்டி வருவதாக குறித்த முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த வருடத்தைப் போன்று இந்த வருடமும் இவ்வாறான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதுடன், சுகாதார துறையினர் நோயாளர்களுக்கு தம்மால் இயன்றதை செய்கின்றார்களோ என்ற கேள்வி எழுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், நோயாளிகள் அளிக்கும் முறைப்பாடுகளை ஆய்வு செய்வதில் பல்வேறு குறைபாடுகள் கண்டறியப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மருந்து பற்றாக்குறை, வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறுதல் , குழந்தைகளின் போசாக்கு குறைபாடு போன்ற பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சுகாதார துறையில் பணியாளர் பற்றாக்குறையை மட்டுப்படுத்துவதற்கு அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், பயிற்சிக்காக ஆயிரம் தாதியர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் ரமேஷ் புத்திரன் இதன்போது தெரிவித்துள்ளார்.

(அ)

ஈழநாடு
Eelanadu
03.01.2024 புதன்கிழமை
சோபகிருது வருடம், மார்கழி 18

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## ஜனாதிபதி தேர்தலில் வெளித்தலையீடுகள்

2015இல் ஆட்சி மாற்றம் ஒன்று ஏற்பட்டபோது, தோல்வியடைந்த மகிந்த ராஜபக்ஷ - அமெரிக்க, இந்திய மற்றும் பிரித்தானிய உளவுத்துறைகள்மீது குற்றஞ்சாட்டினார். இவ்வாறான குற்றச்சாட்டுகளுக்கு எப்போதுமே வலுவான ஆதாரங்கள் இருப்பதில்லை. அனைத்துமே ஊகங்கள்தான் - அதனை நம்புபவர்களும் நம்பாதவர்களும் இருக்கலாம். ஆனால், இவ்வாறான குற்றச்சாட்டுகளை முன்வைப்பவர்கள் எப்போதும் அமெரிக்க - இந்திய தரப்புகள்மீதே திரும்புவதுண்டு. எவருமே சீனாவின் பக்கமாக திரும்புவதில்லை.

சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங், வெளிநாட்டு கட்சிகளுடனான தொடர்புகளை பலப்படுத்துவதற்காக வருடம் ஒன்றுக்கு பத்து பில்லியன் அமெரிக்க டொலர்களை ஒதுக்குவதாக மேற்குலக ஊடகங்கள் உறுதிப்படுத்துகின்றன. அந்தளவுக்கு சீனாவின் செல்வாக்கை விரிவுபடுத்துவதற்கான பல நகர்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அமெரிக்காவின் உடனடி அயல் நாடுகளில் ஒன்றான கனடாவின் தேர்தலில்கூட சீன உளவுத்துறை தலையீடுகளை செய்ததாக கனடிய உளவுத்துறை அதிகாரி ஒருவர் கூறுகின்றார். அந்தளவுக்கு சீனா உலகெங்கும் அதன் செல்வாக்கை விரிவுபடுத்துவதற்கான நகர்வுகளை மேற்கொண்டுவருகின்றது. இந்த நிலையில் இந்த ஆண்டு இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தலின்போதும், சீனா அமைதியாக இருக்குமென்று எவ்வாறு எதிர்பார்க்க முடியும்?

மாலைதீவில் புதிதாக தெரிவாகியுள்ள ஜனாதிபதி இந்திய படைகளை வெளியேறுமாறு கூறுவதற்கு பின்னாலும், சீனாவின் செல்வாக்கே இருக்கின்றது. இந்தியாவின் அனைத்து அயல்நாடுகளிலும் தனது செல்வாக்கை அதிகரிப்பதற்கான பலவாறான நகர்வுகளை சீனா முன்னெடுத்து வருகின்றது. இந்த நிலையில் தங்களுக்கு நெருக்கமானவர்களை பலப்படுத்தும் நகர்வுகளில் சீனா நிச்சயம் ஈடுபடும்.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால் 2015இல் இடம்பெற்ற தேர்தலின் போதான நிலைமைகள் மீளவும் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் தெரிகின்றன. இலங்கை ஒரு சிறிய நாடு - அதிகாரப் போட்டிக்குள் நாங்கள் தலையீடு செய்ய விரும்பவில்லை - என்று ரணில் விக்கிரமசிங்க கூறினாலும், அலிசப்ரி அவ்வப்போது, அதனை உச்சரித்துக்கொண்டாலும்கூட, இடம்பெறவுள்ள தேர்தல்களில் புவிசார் அரசியல் போட்டியின் தாக்கம் இருக்குமென்று ரணில் தரப்பு அச்சப்படாமல் இருக்க முடியாது.

சீன ஆய்வுக் கப்பல்கள் இலங்கையின் கடல் பகுதிக்குள் உள்நுழைவதற்கான அனுமதி வழங்கப்பட்டது தொடர்பில் சச்சரவுகள் ஏற்பட்டது. இதனைக் கருத்தில் கொண்டே ரணில் அரசாங்கம் திடீரென்று வெளிநாட்டு கப்பல்கள் ஒரு வருடத்துக்கு ஆய்வு நடவடிக்கைகளில் ஈடுபடுவதை நிறுத்தி வைத்திருக்கின்றது.

தேர்தலை கருத்தில் கொண்டே இவ்வாறானதொரு தீர்மானத்தை ரணில் தரப்பு எடுத்திருக்கின்றது. ஏனெனில், சீனாவின் கப்பல்கள் அனுமதிக்கப்படுவது தொடர்பில் இந்திய மற்றும் அமெரிக்க கொள்கை திட்டமிடலாளர்கள் அதிக கரிசனை கொண்டிருக்கும் நிலையில்தான் நாங்கள் நடுநிலையானவர்கள் என்னும் வகையில் இவ்வாறானதொரு தீர்மானத்தை அரசாங்கம் எடுத்திருக்கின்றது.

ஆனால், பலம்பொருந்திய சக்திகளுக்கு இடையிலான முரண்பாடுகள் தேர்தலில் நகர்வுகளில் நெருக்கடிகளை ஏற்படுத்திவிடக்கூடாது என்பதை கருத்தில்கொண்டே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கின்றது. ஆனால், இந்த விடயம் தொடர்பில் சீனா கரிசனைகொண்டிருக்கும். அதாவது, கொழும்பின் அரசியல் அரங்கில் தங்களுக்கு ஆதரவானவர்கள் பலமான நிலையில் இருக்க வேண்டும் என்னும் அடிப்படையில் சீனாவும் காய்களை நகர்த்தும்.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால், நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலின்போது, புவிசார் அரசியல் பதற்றங்கள் நிச்சயம் செல்வாக்குச் செலுத்தும். இதனை கருத்தில் கொண்டும் - இதேவேளை, ஈழத்தமிழ் மக்களின் நலனை கருத்தில் கொண்டும்தான் தமிழ்த் தேசிய தரப்புகள் ஜனாதிபதி தேர்தலை கையாள வேண்டும்.

## விவசாயிகளுக்கு நிவாரணம் வேண்டும்

*கொழும்பு, ஜன. 03*

*வற் வரி அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.*

*மஹியங்கனை பகுதியில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் வைத்து கருத்துரைத்த விவசாய தேசிய சம்மேளனத்தின் இணைப்பாளர் ஜயந்த ரந்தெனிய இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.*

*இவ்வாறு நிவாரணம் வழங்கப்படாது விட்டால், எதிர்காலத்தில் கடுமையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ)*

## நிறுத்தப்பட்ட பல திட்டங்கள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன!

*கொழும்பு, ஜன. 03*

*கோவிட்-19 மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக நிறுத்தப்பட்ட பல திட்டங்களை மீள ஆரம்பிப்பது தொடர்பில் தற்போது கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன என்று நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் தெரிவித்துள்ளார்.*

*வீடமைப்புத் திட்டங்கள் மற்றும் நகர அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.*

*நகர அபிவிருத்தி அதிகாரசபையில் புதிய ஆண்டுக்கான கடமைகளை ஆரம்பித்தன் பின்னர் கருத்துரைத்தபோதே அவர் இதனை கூறியுள்ளார். (அ)*

## அரசாங்கத்துக்கு பாதகமான சூழலில் தேர்தலை ஒருபோதும் நடத்தமாட்டோம்

### நளின் பெர்னாண்டோ திட்டவட்டம்

*கொழும்பு, ஜன. 03*

*2024ஆம் ஆண்டு தேர்தல் ஆண்டு என்று சிலர் கூறினாலும், அரசாங்கம் 100வீதம் வெற்றிகரமான பாதையில் பயணிக்கும் போதுதான் ஜனாதிபதி தேர்தல் அல்லது பொதுத் தேர்தல் நடத்தப்படும் என நுகர்வோர் விவகார மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.*

*ஜா எலவில் உள்ள அவரின் அலுவலகத்தில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அமைச்சர், பாதகமான சூழ்நிலையில் அரசாங்கம் தேர்தலொன்றுக்குச் செல்லாது. ஜனாதிபதித் தேர்தல் அல்லது பொதுத் தேர்தலை நடத்த நாட்டுக்கு உரிய பொருளாதார அடித்தளத்தளம் இடப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறான பின்புலத்தில்தான் நாம் தேர்தலை நடத்துவோம். முட்டாள்தனமாக எமக்கு பாதகமான சூழ்நிலை இருக்கும்போது தேர்தலுக்கு செல்ல மாட்டோம். மக்கள் எதிர்பார்க்கும் வேலைத்திட்டத்துடன் எதிர்காலத்தில் மக்களிடம் செல்வோம். ஆகவே, இது தேர்தல் ஆண்டு எனக் கூறுபவர்களுக்கு வழங்க கூடிய செய்தி இதுதான்-என்றார்.*

*இலங்கை அரசமைப்பின் பிரகாரம் எதிர்வரும் நவம்பர் மாதத்துக்கு முன்னர் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட வேண்டும். ஆனால், தேர்தலை பிற்போடும் நோக்கில் அரசாங்கம் சில முயற்சிகளில் ஈடுபட்டு வருவதாக எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டுகளை முன்வைத்து வருகின்றன. என்றாலும், அரசாங்கம் அதனை நிராகரித்துள்ளது. தேர்தல்கள் உரிய காலத்தில் நடத்தப்படும் என ஜனாதிபதி அண்மையில் கருத்து வெளியிட்டிருந்தார் என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது. (அ)*

## 800இற்கும் மேற்பட்டோர் கைது!

*கொழும்பு, ஜன. 03*

*நாடளாவிய ரீதியில் கடந்த 24 மணிநேரத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையில் 822 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர். பெருமளவான போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது.*

*இதன்படி, குறித்த நடவடிக்கையின் போது 273 கிராம் ஹெரோயின், 111 கிராம் ஐஸ், ஒரு கிலோ 623 கிராம் கஞ்சா மற்றும் 100 கஞ்சா செடிகள் உள்ளிட்ட போதைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.*

*இதனிடையே, கைது செய்யப்பட்டவர்களில் 60 சந்தேக நபர்கள் தடுப்புக் காவல் உத்தரவின் அடிப்படையில் மேலதிக விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.*

*அத்துடன், போதைப் பழக்கத்துக்கு அடிமையான 72 பேர் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.*

*மேலும், பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவு மற்றும் விசேட பணியகத்தின் பதிவு செய்யப்பட்ட சந்தேக நபர்கள் பட்டியலில் இருந்த 91 சந்தேக நபர்கள் இதன் போது கைது செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)*


## அவசர தொலைபேசி இலக்கம்

*கொழும்பு, ஜன. 03*

*தற்போது நடைபெறும் விசேட சோதனை நடவடிக்கைக்கு தகவல்களை வழங்குவதற்காக நேற்று அவசர தொலைபேசி இலக்கம அறிமுகப்படுத்தப்பட்டது.*

*பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் தலைமையில் நடந்த கூட்டத்தில் இந்த தொலைபேசி இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டது. 071 859 88 00 என்பதே குறித்த அவசர தொலைபேசி இலக்கமாகும்.*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



**ஜனவரி - 03 புதன்கிழமை**
**சோபகிருது வருடம் - மார்கழி 18**
**நல்ல நேரம் : 09.30 - 10.30**
**ராகு காலம் : 12.00 - 01.30**
**திதி : சப்தமி**




**மேடம்**
புதிய திட்டங்கள் நிறைவேறும். அக்கம்-பக்கம் வீட்டாரின் அன்புத் தொல்லை குறையும். வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். புதிய சலுகைகள் கிடைக்கும். கனவு நனவாகும் நாள்.

**இடபம்**
முக்கிய பிரமுகர்களை சந்திப்பீர்கள். வீண் செலவுகள் ஏற்படும். புதிய வாகனங்களை வாங்குவீர்கள். சக ஊழியர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். உழைப்பால் உயரும் நாள்.

**மிதுனம்**
திட்டவட்டமாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். உடன்பிறந்தவர்கள் உங்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவார்கள். உங்கள் கருத்துக்கு ஆதரவு பெருகும். நினைத்ததை முடிக்கும் நாள்.

**கடகம்**
குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். பாதியில் நின்ற வேலைகள் விரைந்து முடியும். வியாபாரத்தில் வேலையாட்கள் மதிப்பார்கள். பணிகளை விரைந்து முடிப்பீர்கள். புத்துணர்ச்சி பெருகும்.

**சிம்மம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் வேலைச்சுமையால் உடல் அசதி மனச்சோர்வு வந்து நீங்கும். சக ஊழியர்களுடன் பனிப்போர் வந்து நீங்கும். வளைந்து கொடுக்க வேண்டிய நாள்.

**கன்னி**
குடும்பத்தைப் பற்றிய கவலைகள் வந்து நீங்கும். வாகனம் அடிக்கடி செலவு வைக்கும்.உத்தியோகத்தில் சக ஊழியர்களால் பிரச்னைகள் வந்து விலகும். கவனம் தேவைப்படும் நாள்.

**துலாம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் கடமையுணர்வுடன் செயல்படுவார்கள். பாராட்டப்படுவீர்கள் சிறப்பான நாள்.

**விருட்சிகம்**
கடந்த கால இனிய அனுபவங்களை நினைவுக்கூர்ந்து மகிழ்வீர்கள். வியாபாரத்தில் விஐபிகள் வாடிக்கையாளர்கள். சக ஊழியர்களின் ஆதரவால் நினைத்தை முடிப்பீர்கள். சாதிக்கும் நாள்.

**தனுசு**
கணவன்-மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். வியாபாரத்தில் புது ஒப்பந்தம் கையெழுத்தாகும். இழந்த உரிமையைபெறுவீர்கள். திட்டங்கள்நிறைவேறும்.

**மகரம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் அநாவசிய பேச்சை தவிர்ப்பது நல்லது. உத்தியோகத்தில் சின்ன சின்ன இடர்பாடுகளை சமாளிக்க வேண்டியிருக்கும். போராட்டமான நாள்.

**கும்பம்**
கணவன்-மனைவிக்குள் ஆரோக்கியமான விவாதங்கள் வந்து போகும். வியாபாரத்தில் புது வாடிக்கையாளர்கள் அறிமுகமாவார்கள். மேலதிகாரி மதிப்பார். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**மீனம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் புதுயுக்திகளை கையாளுவீர்கள் அதிகாரிகள் உங்களுக்கு முன்னுரிமை தருவார்கள். தொட்டது துலங்கும் நாள்.

# உலகில் நான் எங்கு சென்றாலும் தமிழை புகழாமல் இருந்ததில்லை!

## திருச்சியில் பிரதமர் மோடி



உலகின் எந்த இடத்துக்குச் சென்றாலும் தமிழ் மொழியை புகழாமல் இருந்ததில்லை. தமிழகத்துக்கு வந்தால் புதிய சக்தி பிறக்கிறது என்று திருச்சி பன்னாட்டு விமான நிலையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய பிரதமர் மோடி கூறினார்.

மேலும், தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு மத்திய அரசு அதிகளவில் நிதியை ஒதுக்கீடு செய்து வருகிறது என்று பிரதமர் மோடி கூறினார்.

திருச்சி பன்னாட்டு விமான நிலையத்தின் புதிய முனையத்தை நேற்று திறந்து வைத்தார் பிரதமர் நரேந்திர மோடி. அங்கு பேசிய அவர்,

“2024 ஆண்டுக்கான என் முதல் நிகழ்ச்சி தமிழ்நாட்டில் நடப்பது பெருமையாக உள்ளது. ரூ. 20 ஆயிரம் கோடியில் தொடங்கப்பட்ட மற்றும் அடிக்கல் நாட்டப்பட்ட திட்டங்கள் தமிழ்நாட்டை வளப்படுத்தும். இந்தத் திட்டங்கள் வேலை வாய்ப்புகளையும் உருவாக்கும்.

தமிழ்நாட்டில் கடந்த சில வாரங்கள் கடினமானதாக இருந்தது. தமிழ்நாட்டில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்களின் உயிர், உடமைகளை இழந்து உள்ளனர். அந்த மக்களுக்கு மத்திய அரசு துணை இருக்கிறது.

கடந்த சில நாட்களுக்கு முன் உயிரிழந்த விஜயகாந்த் சினிமாவில் மட்டுமல்ல அரசியலிலும் கப்டனாக இருந்துள்ளார். அவர் தேசிய நலனுக்குதான் எப்போதும் முக்கியத்துவம் தருவார்.

அடுத்த 25 ஆண்டுகால கட்டத்தில் பாரதத்தை வளர்ச்சி அடைந்ததாக மாற்ற வேண்டும். வளர்ச்சி என்பது பொருளாதாரம் மற்றும் கலாசாரம் இரண்டும் சேர்ந்த வளர்ச்சி தான். பாரத நாட்டின் வளம் மற்றும் கலாசாரத்தின் பிரதிபலிப்பு தான் தமிழ்நாடு. தமிழ்நாட்டில்தான் திருவள்ளுவர் உள்ளிட்டோர் சிறப்பான இலக்கியங்களை படைத்துள்ளார்கள்.

தமிழ்நாட்டுக்கு நான் வரும் போதெல்லாம் புதிய சக்தியை எனக்குள் நிரப்பி செல்கிறேன். எனக்கு ஏராளமான தமிழ் நண்பர்கள் உண்டு அவர்களிடமிருந்து தமிழ் கலாசாரத்தை நான் கற்று கொள்கிறேன். நான் எங்கு சென்றாலும் தமிழ்நாட்டின் கலாசாரம் குறித்து பேச மறப்பதில்லை - என்றார். (ஐ)

# சைவ - தமிழ் பண்பாட்டை பிரதிபலிக்கும் திருச்சி சர்வதேச விமான நிலைய முனையம்

திருச்சி, ஜன. 03

சிறீரங்கம் ஆலயத்தின் கோபுரத்தை போன்ற மாதிரியுடன் முகப்புடன், சைவ - தமிழ் பண்பாட்டை பறைசாற்றும் வகையிலான அம்சங்களுடன் திருச்சி சர்வதேச விமான நிலையத்தின் புதிய முனையம் திறந்து வைக்கப்பட்டது.



அத்துடன் உள்செல்லும் வெளியேறும் வாயில்களிலும் இந்து ஆலய கோபுர முகப்பு வளைவுகளும் அமைக்கப்பட்டுள்ளன .

உள்ளே சுவரில் நடராஜர் சிற்பங்கள், இந்து கடவுள்களின் படங்களும் வரையப்பட்டுள்ளன. அத்துடன், பிரமான்ட திரையில் ஆலய தேர் கலாசார நடனங்களும் உள்ளன.

இதேபோல, வருகை, புறப்பாடு, பயணிகள் காத்திருப்பு அறைகள் போன்ற பகுதிகளில் புதிய அதிநவீன வசதிகளுடன் உள்கட்டமைப்பு மற்றும் அலங்காரம் செய்யப்பட்டுள்ளது.

புதிய முனையத்தின் உள்ளே புறப்பாடு பகுதியில் 10 வாயில்கள், வருகை பகுதியில் 6 வாயில்கள் அமைக்கப்பட்டுள்ளன. 40 குடியேற்றப்பிரிவு மையங்கள், 48 பரிசோதனை மையங்கள், 3 சுங்கப்பிரிவு மையங்கள், 15 இடங்களில் எக்ஸ்ரே சோதனை மையங்கள், 10 இடங்களில் ஏரோ ப்ரிட்ஜ், 3 இடங்களில் விஐபி காத்திருப்பு அறைகள், 26 இடங்களில் லிப்ட் மற்றும் எஸ்கலேட்டர், 1,000 கார்களை நிறுத்தும் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இந்த முனையத்தில் சூரிய சக்தி மூலம் மின்சாரம் தயாரிக்கும் வகையில் விமானநிலையத்தின் மேற்கூரை அமைக்கப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இயற்கை பேரிடராக அறிவித்து நிவாரண நிதி அளிக்க வேண்டும்!

## பிரதமரிடம் முதல்வர் கோரிக்கை

திருச்சி, ஜன. 03

“கடந்த மாதம் சென்னை மற்றும் தென் மாவட்டங்களில் கடுமையான மழைப்பொழிவைத் தொடர்ந்து ஏற்பட்ட வெள்ளம் காரணமாக அந்த மாவட்டங்களின் பொது உட்கட்டமைப்புகள் பெருத்த சேதம் அடைந்துள்ளன. மக்களின் வாழ்வாதாரமும் மோசமாக பாதிக்கப்பட்டிருக்கிறது. எனவே, அவற்றை கடுமையான இயற்கை பேரிடர் என்று அறிவித்து, தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து தமிழகத்துக்கு உரிய நிவாரண நிதியை வழங்க தமிழக மக்கள் சார்பாக நான் மீண்டும் கேட்டுக் கொள்கிறேன்” என்று திருச்சி சர்வதேச விமான நிலையத்தில் நடைபெற்ற புதிய ஒருங்கிணைந்த முனைய கட்டட திறப்பு விழாவில் பேசிய முதல்வர் ஸ்டாலின், பிரதமர் மோடிக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.

திருச்சியில் விமான நிலைய புதிய முனையத்தை திறந்து வைக்க நேற்று பிரதமர் மோடி தமிழகம் வந்தார். அவரை தமிழ்நாடு அரசு சார்பில் ஆளுநரும் முதல்வரும் வரவேற்றனர்.

பின்னர் முனைய கட்டட திறப்பு விழாவில் பேசிய அவர்,

பிரதமர் அறிந்த ஒன்றுதான், கடந்த மாதம் சென்னை மற்றும் தென் மாவட்டங்களில் கடுமையான மழைப்பொழிவைத் தொடர்ந்து ஏற்பட்ட வெள்ளம் காரணமாக அந்த மாவட்டங்களின் பொது உட்கட்டமைப்புகள் பெருத்த சேதம் அடைந்திருக்கின்றன. மக்களின் வாழ்வாதாரமும் மோசமாக பாதிக்கப்பட்டிருக்கிறது. எனவே, அவற்றை கடுமையான இயற்கை பேரிடர் என்று அறிவித்து, தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து தமிழ்நாட்டுக்கு உரிய நிவாரண நிதியை வழங்க, தமிழக மக்கள் சார்பாக நான் மீண்டும் கேட்டுக் கொள்கிறேன்.

தொடர்ந்து கோரிக்கையாக வைக்கிறோமே என்று எண்ண வேண்டாம். பரந்து விரிந்த இந்திய பெரு நாட்டில் கோடிக்கணக்கான மக்களுக்கு நெருக்கமாக இருந்து கல்வி, மருத்துவம், அவசிய தேவைகள் மற்றும் உதவிகளை செய்துதர வேண்டிய முக்கிய கடமை மாநில அரசுகளுக்குத்தான் இருக்கிறது” - என்றார். (ஐ)

# ராஜபக்ஷ அல்லாத ஒருவரே பெரமுன தலைவராகவேண்டும்

## சம்பிக்க ரனவக்க கூறுகிறார்

கொழும்பு, ஜன. 03

**மஹிந்த ராஜபக்ச அரசியலில் இருந்து ஓய்வு பெற வேண்டும். ராஜபக்ச அல்லாத ஒருவர் சிறீ லங்கா பொது ஜன பெரமுன கட்சியின் தலைமைப்பதவிக்கு வரவேண்டும் - என்று பாராளுமன்ற உறுப்பினர் பாட்டளி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.**



இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

சிறீ லங்கா பொதுஜன பெரமுன கட்சி மற்றும் ரணில் விக்கிரமசிங்கவின் அனுசரணையுடன் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் நான் பொதுவேட்பாளராக களமிறங்கவுள்ளதாக சுதந்திர மக்கள் சபை உறுப்பினர்களிடம் கூறியதாக செய்திகள் வெளியாகியுள்ளன. இந்த தகவலில் எவ்வித உண்மையும் இல்லை.

எமது அரசியல் கொள்கை பற்றி தெரிந்த மக்களுக்கு இது பொய் என்பது தெரியும். எனினும், இதனை வைத்து எதிர்காலத்திலும் பிரசாரங்கள் முன்னெடுக்கப்படலாம் என்பதால்தான் நிராகரிக்கின்றேன்.

மஹிந்த ராஜபக்சவின் பொருளாதாரக் கொள்கைகளை கடுமையாக 2014 இலேயே விமர்சித்தவன் நான். நாடு வங்குரோத்து அடையும் என அன்றே கூறியிருந்தேன்.

நாட்டை வங்குரோத்து அடைந்ததரப்புடன் நாம் இணையமாட்டோம். எனவே, மஹிந்த ராஜபக்ச அரசியலில் இருந்து ஓய்வு பெற வேண்டும். ராஜபக்ச அல்லாத ஒருவரிடம் மொட்டு கட்சி தலைமைப்பதவி வழங்கப்பட வேண்டும்.

அதேவேளை, ரணில் விக்கிரமசிங்கவுக்கும் எமக்கும் இடையில் அரசியல் உறவு கிடையாது. அவருடனும் அரசியல் கூட்டணி அமைக்கமாட்டோம்- என்றார். (அ)

# கொஸ்லாந்தை பகுதியில் தம்பதி சடலங்களாக மீட்பு

கொழும்பு, ஜன. 03

கொஸ்லாந்தை வெலன்விட்ட நூறு ஏக்கர் பகுதியிலுள்ள தோட்டமொன்றில் நேற்று முன் தினம் பிற்பகல் வயோதிப தம்பதியினர் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

கொஸ்லாந்தை, வெலன்விடவில் வசித்து வந்த 70 வயதுடைய ஆண் ஒருவரும், 60 வயதுடைய பெண் ஒருவருமே இவ்வாறு சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

குறித்த வீட்டில் வயோதிப தம்பதியினர் தனியாக வசித்து வந்ததாகவும், வெல்லவாய பிரதேசத்தை சேர்ந்த இவர்களது மகள் புத்தாண்டு முடிந்து பெற்றோரை பார்ப்பதற்காக நேற்று முன் தினம் வீட்டிற்கு வந்த போது அவர்கள் இறந்துள்ளது. இது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர்.

அதன்படி, சம்பவ இடத்துக்கு சென்ற பொலிஸார், உயிரிழந்த பெண் வீட்டுக்கு மின்சாரம் வழங்கும் மின்சார வயரைப் பிடித்துக் கொண்டு இறந்து கிடந்தது தெரியவந்தது.

வீட்டிற்கு அருகில் இருந்த மரமொன்றை குறித்த பெண் வெட்டிய போது அது மின் கம்பியில் விழுந்து வயர் உடைந்துள்ளது. கம்பியை அகற்ற சென்ற போது மின்சாரம் தாக்கி பெண் உயிரிழந்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர் .

வீட்டில் இருந்து சுமார் 150 மீற்றர் தூரத்தில் வீட்டிற்கு செல்லும் வீதியில் கணவரின் சடலம் காணப்பட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பண்டாரவளை பொலிஸ் பிரிவுக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரதீப் களுபஹன, கொஸ்லந்த பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பீ.ஓ.பி.துமிந்த விக்ரமசிங்க ஆகியோரின் ஆலோசனையின் பேரில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# போதைப்பொருள் வியாபாரிகளின் ரூ. 55 கோடி சொத்துகள் பறிமுதல்!

கொழும்பு, ஜன. 03

'யுக்திய ஒப்பரேஷன்' ஆரம்பிக்கப்பட்டு 14 நாட்களுக்குள் 85 கோடி ரூபாவுக்கு அதிக பெறுமதியான போதைப்பொருட்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

அத்துடன், பாதாளகுழு உறுப்பினர்கள் மற்றும் போதைபொருள் வியாபாரிகளிடமிருந்து 55 கோடி ரூபாவுக்கு அதிக பெறுமதியான சொத்துகளும், வாகனங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனின் ஆலோசனைக்கமைய கடந்த 17 ஆம் திகதி 'யுக்திய ஒப்பரேஷன்' ஆரம்பமானது. நேற்று முன் தினம் 15 ஆவது நாளாகவும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

நாடு தழுவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டுவரும் 'யுக்திய ஒப்பரேஷன்' நடவடிக்கையின்கீழ் 14 நாட்களுக்குள் 20 ஆயிரத்து 797 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஆயிரத்து 18 பேர் தடுப்பு காவலில் வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டுவருகின்றனர். 189 பேர் தொடர்பில் சொத்து சம்பந்தமான விசாரணகள் முன்னெடுக்கப்படுகின்றன.

போதைப்பொருளுக்கு அடிமையான ஆயிரத்து 298 பேர் புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

டிசம்பர் 17 முதல் டிசம்பர் 14 நாட்களுக்குள்11 கிலோ 600 கிராம் ஹெரோயினும், 8 கிலோ 378 கிராம் ஐஸ் போதைப்பொருளும், 297 கிலோ கஞ்சாவும் மீட்கப்பட்டுள்ளன. 20 லட்சத்துக்கு மேற்பட்ட கஞ்சா செடிகளும் மீட்கப்பட்டுள்ளன. (அ)

# தமிழர்களுக்காக ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்க தயாராகும் சிறிதுங்க ஜயசூரிய

கொழும்பு, ஜன. 03

"தமிழ் பொதுவேட்பாளர் என்ற விடயம் அரசியல் களத்தில் பேசுபொருள் மாத்திரமே. அது நடைமுறைக்கு சாத்திய மற்ற விடயமாகும். அவ்வாறான முயற்சி இடம்பெற்றாலும் இந்தியாவின் கோரிக்கையின் பிரகாரம் அதனை கடைசியில் கைவிட்டுவிடுவார்கள்." - என்று ஐக்கிய சோஷலிசக் கட்சியின் தலைவர் சிறிதுங்க ஜயசூரிய தெரிவித்தார்.

தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை மையப்படுத்தியதாக எமது கட்சியும் ஜனாதிபதி வேட்பாளர் ஒருவரை களமிறக்கும் எனவும் அவர் கூறினார்.

ஜனாதிபதி தேர்தல் விவகாரம் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

அரசியல் களத்தில் நாடிபிடித்து பார்ப்பதற்காக அவ்வப்போது ஏதேனும் ஏற்பாடுகள் இடம்பெறும். அந்தவகையிலேயே தமிழ் பொதுவேட்பாளர் விடயமும் தற்போது முன்வைக்கப்பட்டுள்ளது. ஆனாலும் இது நடைமுறை சாத்திய மற்ற விடயம். அதைப்பற்றி பேசி பயன் இல்லை.

ஏனெனில் இலங்கையில் அடுத்த ஜனாதிபதி தேர்தலானது இந்தியாவுக்கும், சீனாவுக்கும் இடையிலான போட்டியாகவே அமையவுள்ளது.

கடைசியாக மாலைதீவில் நடந்த ஜனாதிபதி தேர்தலிலும் இந்நிலைமையே காணப்பட்டது. அந்தவகையில் மொட்டு கட்சி தரப்புக்கு சீனாவும், சஜித் தரப்புக்கு இந்தியாவும் பின்புலமாக இருக்கும்.

தற்போது பொதுவேட்பாளர் பற்றி பேசுபவர்கள் இந்திய கோரிக்கையை ஏற்று, அந்நாடு சார்பு வேட்பாளரையே ஆதரிப்பார்கள்.

அதேவேளை, தேசிய இனப் பிரச்சினைக்கு 'சுயநிர்ணய' உரிமையை அடிப்படையாகக் கொண்ட அரசியல் தீர்வு முன்வைக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ள கட்சி எமது கட்சியாகும். இங்குள்ள கட்சிகளிடம் இந்த கொள்கை இல்லை. எனவே, தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை மையப்படுத்தியதாக எமது கட்சியும் ஜனாதிபதி வேட்பாளர் ஒருவரை களமிறக்கும் - என்றார். (அ)

# பாடசாலை போக்குவரத்து கட்டணம் அதிகரிக்கப்படும்

கொழும்பு, ஜன. 03

பெப்ரவரி மாதம் முதல் பாடசாலை போக்குவரத்து கட்டணத்தை அதிகரிக்க அகில இலங்கை பாடசாலை மாணவர்கள் போக்குவரத்து சங்கம் தீர்மானித்துள்ளது. கட்டண அதிகரிப்பு சதவீதம் குறித்து பாடசாலை தவணை ஆரம்பிக்கப்படும்போது பெற்றோருக்கு அறிவிக்கவுள்ளதாக சங்கத்தின் தலைவர் லலித் பெர்னாண்டோ தெரிவித்தார். இன்று முதல் புதிய வற் வரி திருத்தம் அமுல்படுத்தப்படுவதால் எரிபொருள் உள்ளிட்ட வாகன உதிரிபாகங்களின் விலைகளும் அதிகரித்துள்ளதாக தெரிவித்த அவர், இதன் காரணமாக கட்டாயமாக போக்குவரத்து கட்டணத்தை அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (அ)

# இறைவரித் திணைக்களம் எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 03

18 வயதுக்கு மேற்பட்டவர்களின் வரி எண்களை பதிவு செய்யும் பணி தொடங்கப்பட்டுள்ளதாக உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பான விண்ணப்பத்தை அதன் இணையதளத்தில் சென்று பூர்த்தி செய்து கொள்ளலாம். மதிப்பீட்டு ஆண்டிற்கு 1,200,000 ரூபாய்க்கு மேல் சம்பாதிக்கும் அனைவரும் வரிக் கோப்பைத் திறக்க வேண்டும். ஒரு வருடத்தின் ஏப்ரல் 1ஆம் திகதி முதல் அடுத்த ஆண்டு மார்ச் 31ஆம் திகதி வரையிலான காலம் மதிப்பீட்டு ஆண்டாகக் கருதப்படுகிறது.

வரி செலுத்துவோர் அடையாள இலக்கத்தைப் பெற்றுக் கொள்ளாவிட்டால் 50,000 ரூபாய் அபராதம் விதிக்கப்படும் எனவும் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது. பதிவு செய்துகொள்ளாதவர்களை உள்நாட்டு இறைவரித் திணைக்களம் பதிவு செய்யும் எனவும் இறைவரித் திணைக்களம் அறிவித்துள்ளது. (அ)

### கிரிக்கெட் நிறுவனம் தொடர்பில் ஆராய்ந்த

# அமைச்சரவை உபகுழுவின் அறிக்கை ஜனாதிபதியிடம்

கொழும்பு, ஜன. 03

சிறி லங்கா கிரிக்கெட் நிறுவனம் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட அமைச்சரவை உப குழுவின் அறிக்கை ஜனாதிபதியிடம் நேற்று முன் தினம் கையளிக்கப்பட்டுள்ளது.

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியின் தலைமையில் இந்த அறிக்கை கையளிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச கிரிக்கெட் பேரவையினால், சிறீ லங்கா கிரிக்கெட் நிறுவனத்தின் உறுப்புரிமை இடைநிறுத்தப்பட்டமை தொடர்பில் தேவையான தீர்மானங்களை மேற்கொள்வதற்காக, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் குறித்த அமைச்சரவை உப குழு நியமிக்கப்பட்டது.

இந்த குழுவில் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர, வெளிவெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்கார மற்றும் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் ஆகியோரும் உள்ளடங்குகின்றனர்.

குறித்த குழுவினால் வழங்கப்பட்டுள்ள பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த எதிர்பார்ப்பதாக இதன்போது ஜனாதிபதி தெரிவித்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு குறிப்பிட்டுள்ளது.

அத்துடன் புதிய விளையாட்டு சட்டமூலத்தை விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாக இதன்போது ஜனாதிபதி தெரிவித்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# அனர்த்தங்களின்போது பயிர்ச்செய்கை பாதிப்பு குறித்து அறிக்கையிடவேண்டும்

## வடக்கு ஆளுநர் துறைசார் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், ஜன. 03

**மழை, வெள்ளம், வறட்சி உள்ளிட்ட இயற்கை அனர்த்தங்களினால் பயிர்ச்செய்கைகளுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் குறித்து இடர் முகாமைத்துவ நிலையம் அறிக்கையிட வேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.**

இயற்கை அனர்த்தங்களின் போது சொத்துக்கள், உயிர் சேதங்கள் தொடர்பில் மாத்திரம் அறிக்கையிடப்படுகின்ற போதிலும், பயிர்ச்செய்கைகளுக்கான சேத விவரங்கள் பட்டியலிடப்படாமையால் விவசாயிகள் எதிர்நோக்கும் சிக்கல்கள் தொடர்பில் ஆளுநரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

அனர்த்தங்களின்போது பாதிக்கப்படும் விவசாயிகளுக்கு உரிய முறையில் நட்டஈடு கிடைப்பதில்லை எனவும், காப்புறுதிகள் கிடைப்பதில்லை எனவும் விவசாயிகள் கூறியுள்ளனர். சேத விபரங்கள் தொடர்பில் பட்டியலிடாமையே இதற்கு காரணம் எனவும் விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

விடயங்களை ஆராய்ந்த வடக்கு மாகாண ஆளுநர், இந்த விடயங்கள் தொடர்பில் இடர் முகாமைத்துவ நிலையம் அறிக்கையிடவேண்டும் என கூறியுள்ளார். மழை மற்றும் வெள்ளத்தின் போது கள அறிக்கையிடல் முக்கியமானது எனவும், அனர்த்தங்களின் போது ஏற்படும் அழிவுகள் தொடர்பான தரவுகளை இற்றைப்படுத்தி, உறுதி செய்ய வேண்டியது இடர் முகாமைத்துவ நிலையத்தின் கடமை எனவும் கூறியுள்ளார்.

இவ்வாறு தரவுகள் இற்றைப்படுத்தப்படும் போது விவசாயிகள் எதிர்நோக்கும் சிக்கல்களை தவிர்க்க முடியும் என வடக்கு மாகாண ஆளுநர் தெரிவித்துள்ளார். அத்துடன் இற்றைப்படுத்தப்படும் தரவுகளின் பிரதியை ஆளுநர் செயலகத்திற்கும் சமர்பிக்க வேண்டும் எனவும் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் பணிப்புரை விடுத்துள்ளார். (அ)

# நியூசிலாந்தில் இலங்கைக்கான தூதரகத்தை நிறுவுவதற்கு அனுமதி

கொழும்பு, ஜன. 03

நியூசிலாந்தின் வெலிங்டனில் இலங்கைக்கான தூதரகத்தை நிறுவுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக வெளிவகார அமைச்சர் அலி சப்ரி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

நியூசிலாந்து மற்றும் இலங்கைக்கு இடையிலான இராஜதந்திரத் தொடர்புகளை மேலும் விருத்தி செய்து கொள்ளும் நோக்கில் நியூசிலாந்தின் வெலிங்டனில் இலங்கைக்கான தூதரகத்தை நிறுவுவது பொருத்தமானதெனக் கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக வெளிவகார அமைச்சர் அலி சப்ரி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது. (அ)

# வெதுப்பக உற்பத்திப் பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்படமாட்டாது

கொழும்பு, ஜன. 03

பாண் உள்ளிட்ட வெதுப்பக உற்பத்தி பொருட்களின் விலை அதிகரிக்கப்படமாட்டாது என அகில இலங்கை வெதுப்பக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

புத்தாண்டில் வெதுப்பக பொருட்களின் விலை அதிகரிக்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ள போதிலும் அதில் எந்தவித உண்மையும் இல்லையென அந்த சங்கத்தின் தலைவர் என்.கே.ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

கடுமையான பொருளாதார நெருக்கடிகள் இருந்தபோதிலும், வாடிக்கையாளர்களைப் பற்றி சிந்தித்து பாண் உள்ளிட்ட வெதுப்பக பொருட்களின் விலையை அதிகரிக்காதிருக்க தீர்மானித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

# ஜனவரி 6 முதல் தடுப்பூசி ஏற்றும் திட்டம் ஆரம்பம்!

கொழும்பு, ஜன. 03

குழந்தைகளுக்கு அம்மை நோயிற்கான தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டம் ஜனவரி 6 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக சுகாதார மேம்பாட்டு பணியகம் தெரிவித்துள்ளது. 6 முதல் 9 மாதங்களுக்கு இடைப்பட்ட குழந்தைகளுக்கு தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. குழந்தைகள் மத்தியில் அம்மை நோய் அதிகளவில் பரவி வரும் நிலையில் இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக தெரிவித்துள்ளது. இந்த திட்டம் எதிர்வரும் ஜனவரி 06 ஆம் திகதி காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை இடம்பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அம்மை நோயாளர்கள் அதிகமாக பதிவாகியுள்ள 9 மாவட்டங்களில் இந்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. கொழும்பு, கம்பஹா, களுத்துறை, காலி, மாத்தறை, கண்டி, யாழ்ப்பாணம், குருநாகல் மற்றும் கல்முனை ஆகிய மாவட்டங்களில் தடுப்பூசி ஏற்றும் திட்டம் நடைமுறைபடுத்தப்படவுள்ளது. (அ)

# சூட்சுமமான முறையில் தங்க பாளம் கடத்த முயற்சித்த ஒருவர் சிக்கினார்

கொழும்பு, ஜன. 03

கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து 17 கோடியே அறுபது இலட்சம் ரூபாய் பெறுமதியான 66 தங்க பாளங்களை சட்டவிரோதமான முறையில் எடுத்துச் செல்ல முயற்சித்த சிறீலங்கன் கேட்டரிங் நிறுவன ஊழியர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் சிரேஷ்ட பிரதி சுங்கப் பணிப்பாளரினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பின்னர் அவருக்கு அபராதமும் விதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த நபர் நேற்று முன்தினம் தமது ஆடையில் மறைத்து வைத்து தங்க பாளங்களை விமான நிலையத்துக்கு வெளியே கொண்டு செல்ல முயன்ற போது கைது செய்யப்பட்டார்.

இந்த தங்க பாளங்கள் அனைத்தும் சுங்கத்தினரால் பறிமுதல் செய்யப்பட்டதாகவும், அவருக்கு 17 கோடியே அறுபது லட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டதாகவும் சுங்க ஊடகப் பேச்சாளர் சீவலி அருக்கொட தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், சிறி லங்கன் கேட்டரிங் நிறுவன ஊழியர் அபராதத்தை செலுத்த தவறியதால் கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகள் அவரை நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அதன்படி, அவரை எதிர்வரும் 11ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. (அ)

# முன்னாள் அமைச்சர் மகேஸ்வரனின் நினைவேந்தல் வட்டுக்கோட்டையில்

யாழ்ப்பாணம், ஜன. 03

கொழும்பில் சுட்டுப்படுகொலை செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர்அமரர் மகேஸ்வரனின் நினைவேந்தல் நிகழ்வு நேற்று முன் தினம் வட்டுக்கோட்டை தொகுதி ஐக்கிய தேசிய கட்சி அலுவலகத்தில் இடம்பெற்றது.

கொழும்பில் வைத்து சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் அமரர் தியாகராஜா மகேஸ்வரன் அவர்களது 16ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்று முன் தினம் வட்டுக்கோட்டை ஐக்கிய தேசியக் கட்சியின் அலுவலகத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் வட்டுக்கோட்டை தொகுதி அமைப்பாளர் விஜிமருதன் தலைமையில் நடைபெற்றது.





நிகழ்வின் ஆரம்பத்தில் இறைவழிபாடுகள் இடம்பெற்று தேவாரம் இசைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஈகச்சுடரேற்றப்பட்டு, அன்னாரின் திருவுருவப் படத்திற்கு மலர் மாலை அணிவித்து மலர் தூவி நினைவேந்தல் அனுஷ்டிக்கப்பட்டது. பின்னர் மதகுருமாரின் ஆசியுரைகள் மற்றும் நினைவுப் பேருரைகள் என்பன இடம்பெற்றன. அத்துடன் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் மதகுருக்கள், கட்சியின் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்கள், கட்சியின் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர். (அ)

# ஜனாதிபதி தேர்தலில் ரணில் உறுதியாகப் போட்டியிடுவார்!

## கூறுகின்றார் பாலித ரங்கே பண்டார

கொழும்பு, ஜன. 03

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளராக தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவே நிறுத்தப்படுவார் என அக்கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

“இந்நாட்டில் தற்போது உள்ள தலைவர்களில் சர்வதேச சமூகம் அங்கீகரித்துள்ள சந்தேகமில்லாமல் தீர்மானங்களை எடுக்கும் அனுபவமுள்ள ஒரே தலைவராக ரணில் விக்ரமசிங்கவே உள்ளார். ஜனாதிபதி எடுத்த தீர்மானங்களை அமுல்படுத்துவதன் மூலம் 25 வருடங்களின் பின்னர் நாட்டின் தேசிய வருமானம் அதிகரிக்கும். அதன் மூலம் மக்களுக்கு நிவாரணம் வழங்க முடியும்.

மக்கள் வரிசையில் நின்று கொண்டிருந்த தருணத்தில்



நாட்டைக் காப்பாற்றுமாறு சிலரிடம் கோரிய போது பயந்து ஓடிப்போய் ஒளிந்துக்கொண்டவர்கள் இன்று மீண்டும் மக்களை தவறாக வழிநடத்திச் செயற்படுகின்றனர். ஆகவே, மக்கள் இவ்வாறு போலி பிரசாரங்களுக்கு அகப்பட வேண்டாம்.

நாடு பொருளாதார ரீதியாக ஸ்திரத்தன்மையை எட்டி வருகிறது. இவ்வாண்டு இறுதிக்குள் மிகவும் ஸ்திரமான பொருளாதாரமாக எமது பொருளாதார மாறும். ஜனாதிபதி அதற்கான அனைத்துத் தீர்மானங்களையும் எடுத்துள்ளார்.

ஐ.தே.கவின் அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவே. அவரால் மாத்திரமே இந்த நாட்டை உறுதியாக மீட்டெடுக்க முடியும்.” என்றும் பாலித ரங்கே பண்டார வலியுறுத்தினார். (அ)

# வற் வரி திருத்தத்தால் நாட்டில் மத்திய தர வர்க்கமே பாதிப்பு!

## பொருளாதார ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜன. 03

**வற் என்ற பெறுமதி சேர் வரி திருத்தத்தினால் மத்திய தர வர்க்கத்தினரே அதிகளவில் பாதிப்படைவார்கள் என பொருளாதார ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.**

நேற்று முதல் அமுலாகும் வகையில் 15 சதவீதமாக காணப்பட்ட வற் வரி 18 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், குறித்த விடயம் தொடர்பில் கருத்துரைத்த பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளியல் துறை பேராசிரியர் வசந்த அத்துக்கோரள, வரி திருத்தம் காரணமாக முக்கிய பொருட்கள் மற்றும் சேவைகள் என்பவற்றிற்கான கட்டணம் குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

இதன்படி, எரிவாயு, எரிபொருள் என்பவற்றின் விலை அதிகரித்துள்ளதுடன் போக்குவரத்து சேவை உள்ளிட்ட சேவைகளின் கட்டணமும் அதிகரித்துள்ளது.

இதன் காரணமாக கிராமிய மக்களை விடவும் நடுத்தர வர்க்கத்தினரே அதிகளவில் பாதிப்படைய கூடிய நிலைமை காணப்படுகிறது.

குறிப்பாக நகர்புறங்களில் வசிக்கும் நடுத்தர வர்க்கத்தினரும் குறைந்த வருமானம் பெறுவோரும் வெகுவாக பாதிப்படைவார்கள் என பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளியல் துறை பேராசிரியர் வசந்த அத்துக்கோரள தெரிவித்துள்ளார்.

(அ)

# உயர்தர பரீட்சை நாளை ஆரம்பம்

கொழும்பு, ஜன. 03

கல்வி பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை நாளை ஆரம்பமாகவுள்ளது.

நிலவும் மழையுடனான வானிலை மற்றும் வெள்ள நிலைமை காரணமாக கெக்கிராவ மடாட்டுகம ரேவத வித்தியாலயத்திற்கான பரீட்சை மத்திய நிலையத்தை மாற்றியமைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறித்த பாடசாலையில் உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள பரீட்சார்த்திகளுக்காக கல்கிரியாகம மத்திய மகா வித்தியாலயத்தில் புதிய பரீட்சை மத்திய நிலையத்தை ஸ்தாபிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, இம்முறை உயர்தரப் பரீட்சைக்காக முதல் முறையாக கொரிய மொழி பரீட்சை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

பரீட்சை அனுமதி அட்டைகள் இதுவரை கிடைக்கப்பெறாத பரீட்சார்த்திகள், பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தினூடாக அதனை தரவிறக்கம் செய்ய முடியுமென திணைக்களம் தெரிவித்துள்ளது.

இம்முறை கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைக்கு 346,976 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர்.

இவர்களில் 281,445 பேர் பாடசாலை மாணவர்கள் என்பதுடன், 65531 பேர் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்முறை நாடளாவிய ரீதியில் 2,258 பரீட்சை மத்திய நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

(அ)

# பலத்த மழை, அதிக நீர்ஓட்டம் காரணமாக மஹியங்கனையில் பாலம் இடிந்து வீழ்ந்தது!

கொழும்பு, ஜன. 03

மஹியங்கனை இருபதாம் கட்டையிலிருந்து ரோஹண சந்திக்கு செல்லும் வீதியில் உள்ள பாலம் நேற்று செவ்வாய்க்கிழமை காலை முற்றாக உடைந்துள்ளதாக மஹியங்கனை பிரதேச செயலாளர் சஞ்சய் வீரசிங்க தெரிவித்தார்.

பலத்த மழை மற்றும் மஹியங்கனை தம்பராவ ஓயாவின் நீர்மட்டம் உயர்வினால் பாலம் முற்றாக இடிந்து வீழ்ந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மஹியங்கனை ரொட்டலவெலக்கு அருகில் சிறு வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளதாகவும், நீர்ப்பாசனப் பிரிவு மகாவலி அதிகாரசபை பிரதேச செயலகத்துடன் இணைந்து பொலிஸார் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் மஹியங்கனை பிரதேச செயலாளர் சஞ்சய் வீரசிங்க மேலும் தெரிவித்தார். (அ)

# வெலிகமவில் சுட்டுக்கொல்லப்பட்ட பொலிஸ் அதிகாரிக்கு பதவி உயர்வு!

கொழும்பு, ஜன. 03

வெலிகம பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப் பின்போது சுட்டுக்கொல்லப்பட்ட பொலிஸ் சார்ஜன்ட், உப பொலிஸ் பரிசோதகராக பதவி உயர்த்தப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவில் கடமையாற்றிய உபுல் சமிந்த குமாரவுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 31 ஆம் திகதி வெலிகம பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது இந்த சார்ஜன்ட் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

இதனையடுத்து பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் டிசெம்பர் 31 முதல் அவருக்கு பதவி உயர்வு வழங்கியுள்ளார்.

(அ)

# திருகோணமலையில் 61 எரிபொருள் தாங்கிகளை அபிவிருத்தி செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம்

கொழும்பு, ஜன. 03

திருகோணமலை சீனன்குடா துறைமுகத்தின் மேற்புற தாங்கி திடல் 99 தாங்கிகளைக் கொண்டமைந்துள்ளது. அவற்றில் 61 தாங்கிகளை திருகோணமலை பெற்றோலிய முனைய தனியார் கம்பனிக்கு 50 வருடகாலத்திற்கு குத்தகைக்கு வழங்குவதற்கான அங்கீகாரம் அமைச்சரவையால் வழங்கப்பட்டுள்ளது.

குறித்த 61 எரிபொருள் தாங்கிகளை அபிவிருத்தி செய்வதற்கான சாத்தியவளக் கற்கை உள்ளிட்ட அடிப்படை படிமுறைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

குறித்த சாத்தியவளக் கற்கை மூலம் இக்கருத்திட்டம் 16 ஆண்டுகளில் 07 கட்டங்களாக அபிவிருத்தி செய்வதற்குப் பரிந்துரைக்கப்பட் டுள்ளதுடன், அதன் முதலாவது கட்டத்தின் கீழ் பொருளாதார ரீதியாகப் பயனுறு வாய்ந்த 09 தாங்கிகளை மறுசீரமைப்புச் செய்வதற்கும், கிட்டத்தட்ட 1.75 கிலோமீற்றர் தூர வீதியைப் புனரமைப்பதற்கும், ஏற்புடைய ஏனைய வசதிகளை நிர்மாணிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இக்கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக நிர்மாணித்தல், நடைமுறைப்படுத்தல் மற்றும் ஒப்படைத்தல் எனும் வணிக மாதிரியைப் பின்பற்றுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

அதற்கமைய, முதலாவது கட்டத்தின் கீழ் மேற்கொள்வதற்கு உத்தேச அபிவிருத்தித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குப் பொருத்தமான முதலீட்டாளரைத் தெரிவு செய்வதற்காக, குறித்த பெறுகைச் செயன்முறையைக் கடைப்பிடிப்பதற்காக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# போதைப்பொருள் தடுப்பு, பாரிய கடத்தல்காரர்களை சிக்க வைக்க தேசிய போதைப்பொருள் தடுப்பு பிரிவு!

கொழும்பு, ஜன. 03

போதைப்பொருள் தடுப்பு, பாரிய கடத்தல்காரர்களைச் சிக்க வைப்பது உள்ளிட்ட நடவடிக்கைகளுக்காக 'தேசிய போதைப்பொருள் தடுப்புக் கட்டளை' (போதைக்கு எதிரான கட்டளை) பிரிவு என்ற படையை உருவாக்குவதற்கான கூட்டு அமைச்சரவைப் பத்திரம் எதிர்வரும் வாரத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதற்கான பணிப்புரையை ஜனாதிபதி வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நீதி அமைச்சு ஆகியன இணைந்து சட்டத்தில் உள்ள இடைவெளிகளை நிரப்புவதற்கு தேவையான அமைச்சரவைப் பத்திரத்தை உருவாக்கி, பாரியளவிலான கடத்தல்காரர்களைக் கைது செய்வதற்கான விசேட அதிகாரங்களைக் கொண்ட 'தேசிய போதைப்பொருள் எதிர்ப்புக் கட்டளை' பிரிவை உருவாக்க எதிர்பார்ப்பதாகவும் கூறப்படுகிறது.

(அ)

# போக்குவரத்து தொடர்பான தீர்மானம் மேற்கொள்ளும் அதிகாரம் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுக்கு?

கொழும்பு, ஜன. 03

போக்குவரத்துத் துறை தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ளும் அதிகாரத்தை தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிற்கு வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

ரயில், முச்சக்கர வண்டி மற்றும் பாடசாலை போக்குவரத்து சேவைகளின் கட்டணங்கள் உட்பட போக்குவரத்துத் துறை தொடர்பான கட்டணங்கள் தொடர்பில் தீர்மானங்களை எடுக்கும் அதிகாரத்தை தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுக்கு வழங்குமாறு அமைச்சரவை பத்திரம் ஒன்றை வழங்கியுள்ளேன்.

இதன்மூலம் நியாயமான விலைக் கொள்கையை அங்கு ஏற்படுத்த முடியும்-என்றார்.

# இலங்கை சுங்கத்துறை வரலாற்றில் கடந்த ஆண்டில் அதிக வருவாய்!

கொழும்பு, ஜன. 03

இலங்கை சுங்கத்துறை வரலாற்றில் அதிக வருவாயை கடந்த ஆண்டு ஈட்டியுள்ளது. கடந்த ஆண்டு 970 பில்லியன் ரூபாயை வருமானமாக ஈட்டியுள்ளதாக இலங்கை சுங்கம் அறிவித்துள்ளது.

முன்னதாக 2018ஆம் ஆண்டில் ஈட்டப்பட்ட 923 பில்லியன் ரூபாய் வருமானமே இதுவரையில் இலங்கை சுங்கத்தின் வரலாற்றில் ஈட்டபட்ட அதிக வருமானமாக பதிவாகியிருந்தது.

நிதியமைச்சு, கடந்த வருடத்துக்கான வருமான இலக்காக ஆயிரத்து 217 பில்லியன் ரூபாயை இலங்கை சுங்கத்துக்கு நிர்ணயித்திருந்தது.

எவ்வாறாயினும், இறக்குமதி கட்டுப்பாடுகளை கருத்தில் கொண்டு, அந்த இலக்கை 893 பில்லியன் ரூபாயாக திருத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# கொழும்பு துறைமுக நகரில் தனியார் வைத்தியசாலை!

கொழும்பு, ஜன. 03

கொழும்பு துறைமுக நகரத்தில் தனியார் வைத்தியசாலையொன்றை நிர்மாணிப்பதற்கான முன்மொழிவிற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

பாராளுமன்ற அங்கீகாரத்திற்கு சமர்ப்பிப்பதற்காக முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ஆசிரி போர்ட் சிற்றி ஹொஸ்பிட்டல் (தனியார்) கம்பனியால் 100 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டின் கீழ் கொழும்பு துறைமுக நகரத்தில் வைத்தியசாலையொன்றை நிர்மாணிப்பதற்கான கருத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்கு முன்மொழிவொன்று சமர்ப்பிக்கப்பட்டது.

2023 ஆம் ஆண்டு 02 ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகர (மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த வணிகங்களுக்காக விடுவித்தல் அல்லது ஊக்குவிப்புக்களை வழங்குதல் தொடர்பான வழிகாட்டல்) கட்டளைகளின் 2(ஆ) இன் கீழ் குறித்த கருத்திட்டத்தை விடுவித்தல் அல்லது ஊக்குவிப்புக்களை வழங்குவதற்கான தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

அதற்கமைய, குறித்த ஏற்பாடுகளின் கீழ் விடுவித்தல் அல்லது ஊக்குவிப்புக்களை வழங்குவதற்காகவும், குறித்த கருத்திட்டத்தை மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த வணிகமாக வர்த்தமானி அறிவித்தல் விதியொன்றின் மூலம் வெளியிட்ட பின்னர், குறித்த விதியை நாடாளுமன்ற அங்கீகாரத்திற்கு சமர்ப்பிப்பதற்காக ஜனாதிபதியால் முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

ஈழநாடு



# மட்டக்களப்பு உன்னிச்சை குளத்தின் மூன்று வான்கதவுகள் நேற்று திறப்பு

மட்டக்களப்பு, ஜன. 03

**கடந்த சில நாட்களாக மட்டக்களப்பில் பெய்த மழை காரணமாக உன்னிச்சை குளத்தின் நீர் மட்டம் உயர்துள்ளதால் மூன்று வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.**

மட்டக்களப்பு மாவட்டத்தின் பாரிய குளமாக திகளும் உன்னிச்சை குளம் 33 அடி நீரினை கொள்ளளவாக கொண்டுள்ள நிலையில் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் அறிக்கையின் பிரகாரம் 10" இற்கு மேல் நீர் வான் பாய்வதனால் குளத்தின் 3 கதிவுகளும் திறக்கப்பட்டுள்ளன.

குளத்திற்கு அருகில் குடியிருப்பவர்கள் மிகவும் அவதானமாக இருக்குமாறு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது. (அ)

## புதிய கல்வியாண்டிற்கான சத்தியப்பிரமாணம்

அம்பாறை, ஜன. 03

புதிய கல்வியாண்டிற்கான சத்தியப்பிரமாணமும், நாட்டிற்காக உயிர்நீத்த படைவீரர்களுக்கான மௌனப் பிரார்த்தனையும் கல்முனை வலயக் கல்விப்பணிப்பாளர் எம்.எஸ். சஹ்துல் நஜீம் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் கணக்காளர் வை. ஹபீபுல்லா, பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான எம்.எச். எம். ஜாபிர், எம்.எச். றியாஸா, பீ. ஜிஹானா ஆலிப், என். வருண்யா அடங்கலாக வலயக் கல்விப் பணிமனை அதிகாரிகள் பலரும் பங்கேற்றனர்.

வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹ்துல் நஜீம் தேசியக் கொடியையும் கணக்காளர் வை. ஹபீபுல்லா மாகாணக் கொடியையும், பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.எச்.எம். ஜாபிர் வலயக் கொடியையும் ஏற்றி வைத்தார்கள்.

நிந்தவூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் யூ.எல். முகம்மட் சாஜித் புதிய ஆண்டுக்கான சத்தியப் பிரமாணத்தை ஒப்பு வித்தார். (அ)



# சாகாமம் குளம் வான்பாய்கிறது!

### மக்கள் கண்டுகளிக்க தினமும் படையெடுப்பு

காரைதீவு, ஜன. 03

அம்பாறை மாவட்டத்தில் திருக்கோவில் பிரதேச த்திற்குட்பட்ட சாகாமம் நீர்ப்பாசனக் குளத்தின் மேலால் வெள்ளம் வான் பாய்கின்றது.

மக்கள் தினமும் அதனை கண்டு களிக்க படையெடுத்து வருகிறார்கள்.

கடந்த மூன்று நான்கு தினங்களாக அங்கு வெள்ளம் வான் பாய்வதை காணக் கூடியதாக இருக்கின்றது.

இதேவேளை, கஞ்சிகுடிச் சாறு குளமும் வான் பாய்வதாகக் கூறப்படுகிறது. (அ)

# “அயலவர்களுக்கு உதவுவோம்” நிவாரணத்தின் மூன்றாம் கட்டம்

அம்பாறை, ஜன. 03

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள கன மழை காரணமாக பல குடும்பங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு உதவும் வகையில் அம்பாறை மாவட்ட பல்வேறு பிரதேசங்களையும் சேர்ந்த குடும்பங்களுக்கு “அயலவர்களுக்கு உதவுவோம் மூன்றாம் கட்டம்” திட்டத்தின் கீழ் அரிசி பொதிகள் கிழக்கின் கேடயத்தின் நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் மூலம் நேற்று வழங்கப்பட்டது.



கிழக்கின் கேடயத்தின் தலைவர் எஸ்.எம்.சபீஸ் சொந்த நிதியிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டு அம்பாறை மாவட்டத்தில் பெய்துவரும் தொடர்ச்சியான மழை காரணமாக பாதிக்கப்பட்டு வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங்கள், தொழில் பாதிக்கப்பட்டு மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்ற குடும்பங்கள், வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு இருப்பிடங்களை இழந்தவர்களுக்கு இந்த பொதிகள் வழங்கப்பட்டன.

கடந்த கொரோனா தொற்று காலத்திலும் ஜனாஸா நல்லடக்கம், நிவாரணப்பணி என பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்த கிழக்கின் கேடயம் அமைப்பு அம்பாறை மாவட்டத்தை சேர்ந்த 1000 குடும்பங்களுக்கான உலருணவு பொதிகளை கொரோனா தொற்று காலத்திலும் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# நான்கு பாரிய மரங்கள் அடியோடு வீழ்ந்து பாடசாலை பெரும் சேதம்!

### சம்மாந்துறை அல்அஸ்ஹறில் சம்பவம்

காரைதீவு, ஜன. 03

சம்மாந்துறை அல் அஸ்ஹர் வித்தியாலயத்தில் பாரிய மரங்கள் அடியோடு வீழ்ந்து பாடசாலை பெரும் அனர்த்தத்திற்குள்ளானது.



கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை வீசிய பலத்த காற்று மற்றும் கனமழை காரணமாக சம்மாந்துறை அல்ஹர் வித்தியாலய த்தில் இருந்த நான்கு பாரிய மரங்கள் வீழ்ந்து பாடசாலைக்கு பெரும் அனர்த்தத்தை விளைவித்துள்ளது என அதிபர் ஏ.அப்துல் றஹீம் தெரிவித்தார்.

பாரிய ஆலமரம் உள்ளடங்களாக நான்கு மரங்கள் அடியோடு சாய்ந்து மூன்று பாரிய கட்டடங்கள் பெரும் சேதத்துக்குள்ளாகின.

அண்மையிலே திறந்து வைக்கப்பட்ட இரண்டு மாடிக் கட்டடமும் அதில் பாரிய சேதத்துக் குள்ளானது.

60x20 அளவிலான புதிய கட்டடம் ஒன்றும் மாணவர் தளபாடங்கள் சகிதம் தரைமட்டமாகியது.

மின்சார கம்பம் ஒன்றும் அடியோடு வீழ்த்தப்பட்டது.



இவ் அனர்த்தம் பற்றி கேள்வியுற்றதும் சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் டாக்டர் உமர் மௌலானா கோட்டக் கல்விப்பணிப்பாளர் ஏ. நசீர் உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா உள்ளிட்ட குழுவினர் நேற்று முன் தினம் திங்கட்கிழமை காலை சென்று பார்வையிட்டனர்.

இதேவேளை சம்மாந்துறை கோட்ட கல்வி பணிப்பாளர் ஏ. நசீர் இந்த அனர்த்தம் தொடர்பாக கேள்விப்பட்ட மறுகணம் அம்பாறை மாவட்ட செயலகம் அனர்த்த முகாமைத்துவ பிரிவு சம்மாந்துறை பிரதேச செயலாளர் பிரதேச சபை மற்றும் வலயக்கல்விப் பணிமனை ஆகிய நிறுவனங்களுக்கு தகவலை வழங்கி மரங்களை அகற்றும் பணிக்கு உதவியிருக்கின்றார்.

இராணுவம் மற்றும் குறித்த தரப்பினரும் விரைந்து மரங்களை அகற்றும் பணியில் ஈடுபட்டனர்.

ஒரு கோடி ரூபாய்க்கு மேல் சேதம் விளைவித்திருக்கிறது என்று வலயக்கல்விப் பணிமனையின் கட்டடங்கள் பிரிவு தெரிவிக்கின்றது. (அ)



# காரைதீவு எங்கும் வெள்ளக்காடு

காரைதீவு, ஜன. 03

கடந்த சில நாட்களாக பொழிந்த கனமழையையடுத்து காரைதீவு மாவடிப்பள்ளி அம்பாறை பிரதான வீதியில் வெள்ளம் பரவுகிறது.

நேற்று முன் தினமும் நேற்றும் வாகனங்கள் சிரமத்திற்கு மத்தியில் பயணித்தன.

காரைதீவு இராணுவ முகாம் ஊடாக விபுலானந்தா கலாச்சார மண்டபத்திற்கு செல்லும் பிரதான வீதியில் வெள்ளம் பரவுகிறது. அங்கும் பயணிகள் சிரமத்திற்கு மத்தியில் பயணிக்கின்றனர்.

காரைதீவு வெள்ளக் காடாக காட்சிளிக்கிறது.

குறிப்பாக கந்தசுவாமி ஆலய வளாகத்தில் வெள்ளம் சூழ்ந்துள்ளது.

மக்கள் வெள்ளம் பாய்வதிலும் ஆர்வம் காட்டினார்கள்.

மேலும் காரைதீவிலுள்ள தாழ் நில பிரதேசங்களிலும் வயல் வெளிகளிலும் வெள்ளம் தேங்கி நிற்கிறது.

கடற்றொழில் மற்றும் விவசாயம் பாதிக்கப்படுகிறது. மக்களின் அன்றாட வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

வீதி வடிகால்கள் மக்களாலும் பிரதேச சபையினராலும் ஆங்காங்கே சுத்தம் செய்யப்பட்டு வருகிறது.

பெரும்பாலான வீட்டு வாசல்களில் வெள்ளம் தேங்கி நிற்கிறது. (அ)

# தென்கொரிய எதிர்க்கட்சி தலைவருக்கு கத்திக்குத்து

## பூசான் நகரத்தில் பதற்றம்

சியோல், ஜன. 03

**தென்கொரியாவின் ஜனநாயக எதிர்கட்சி தலைவர் லீ ஜே-மயுங் நேற்று தெற்குத் துறைமுக நகரமான பூசானுக்குச் சென்றபோது தாக்குதலுக்கு இலக்காகியுள்ளதாக ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்தது.**



லீயிடம் நினைவுக் கையொப்பம் கேட்டு அணுகிய தாக்குதல்காரர், முன்னோக்கிச் சென்று லீயின் கழுத்தில் கத்தியால் குத்தினார் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

50 அல்லது 60 வயது மதிக்கத்தக்க அந்த நபர், உடனே கட்டுப்படுத்தப்பட்டு சம்பவ இடத்திலேயே கைது செய்யப்பட்டுள்ளார்.

லீ, கண்களை மூடிக்கொண்டு தரையில் படுத்திருப்பதையும் சுற்றியுள்ளவர்கள் அவரது கழுத்தில் கைக்குட்டையை வைத்து அழுத்துவதையும் ராய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் வெளியிட்ட படங்கள் காட்டுகின்றன.

லீ ஹெலிகாப்டர் மூலம் அங்கிருந்து மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டுள்ளதாகவும் அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த சம்பவத்தை அடுத்து பூசான் நகரத்தில் பதற்றமான நிலைமை ஏற்பட்டுள்ளது. இதனால் இங்கு கடுமையாக பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதுடன், சம்பவத்தின் பின்புலம் தொடர்பில் பூசான் நகர பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# ஜப்பான் நில நடுக்கத்தினால் பலியானோர் 48 ஆக உயர்வு





ரோக்கியோ, ஜன. 03

மேற்கு ஜப்பானில் அடுத்தடுத்து ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 48 ஆக அதிகரித்துள்ளது.

ஜனவரி 1 ஆம் திகதி பிற்பகல் வேளையில் ஜப்பானில் முதல் நிலநடுக்கம் பதிவானது.

ஜப்பானின் நோட்டோ தீபகற்பத்தில்,ஷிகாவா மாகாணத்தில் நிலநடுக்கம் மையம் கொண்டிருந்தது.

இதன் தாக்கம் 7.6 ரிச்டராக பதிவானது. அதன் பின்னர் அடுத்தடுத்து நில அதிர்வுகள் ஏற்பட்டன. அவை 3.2 ரிச்டர் முதல் 7.5 ரிச்டர் வரை பதிவாகின.

தொடர்ச்சியாக நிலநடுக்கங்கள் ஏற்பட்ட நிலையில், இஷிகாவாவிற்கு தீவிர சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

மேற்கு கடற்கரைப் பகுதியையொட்டிய ஹோன்ஷூ உள்ளிட்ட பிற பகுதிகளுக்கும் ஹோக்காய்டோ உள்ளிட்ட ஜப்பானின் வடக்குப் பகுதியில் அமைந்துள்ள பிரதான தீவுகளுக்கும் குறைந்த அளவிலான சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

தொடர் நிலநடுக்கம் காரணமாக மேற்கு கடற்கரையையொட்டிய நகரங்களின் பல பகுதிகளில் சாலைகள், ரயில் பாதைகள் கடுமையாகச் சேதமடைந்தன.

தொலைத்தொடர்பு கோபுரங்கள் சேதமடைந்துள்ளதால், பல பகுதிகளில் தொலைபேசி சேவைகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில், ,ஷிகாவாவில் இதுவரை 48 பேர் உயிரிழந்துள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளதுடன், 16 பேர் படுகாயமடைந்துள்ளனர். (அ)



# காஸாவில் 21,978 பேர் உயிரிழப்பு!

ஜெருசலேம், ஜன. 03

காசாவில் போர் தொடங்கியதில் இருந்து இதுவரை 21,978 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் 57 ஆயிரத்து 697 பேர் காயமடைந்துள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக்கரையில் 324 பேர் உயிரிழந்துள்ளதாகவும் 3,800 பேர் காயமடைந்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# 379 பேருடன் பயணித்த ஜப்பான் விமானம் ஓடுபாதையில் தீக்கிரை

ரோக்கியோ, ஜன. 03

ரோக்கியோவின் ஹனேடா விமான நிலையத்தின் ஓடுபாதையில் ஜப்பான் எயார்லைன்ஸ் விமானம் ஒன்று தீப்பிடித்துள்ளது.

குறித்த விமானம் நேற்று ஹனேடா விமான நிலையத்தின் ஓடுதளத்தில் தரையிறங்கிய போது கடலோர காவல்படை விமானத்தின் மீது மோதி தீப்பிடித்ததாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஜல் 516 என்ற இந்த விமானம் ஹொகைடோவிலிருந்து பயணத்தை ஆரம்பித்துள்ளது.

விமானம் தீப்பிடித்து எரியும் காணொளியை என்.எச்.கே எனும் ஜப்பானிய அரச ஊடகம் வெளியிட்டுள்ளது.

விமானத்தில் 367 பயணிகள் இருந்துள்ளனர். அவர்கள் உட்பட 379 பேர் பத்திரமாக வெளியேற்றப்பட்டதாக என்.எச்.கே தெரிவித்துள்ளது.






விமானம் தரையிறங்குகையில், ஜப்பான் கடலோர காவல்படை விமானத்தின் மீது மோதிவிட்டதாக சுநரவநசள மற்றும் என்.எச்.கே செய்தி நிறுவனங்கள் கூறியுள்ளன.

அந்த கடலோர காவல்படை விமானத்தில் இருந்த 6 பேரில் ஒருவர் பத்திரமாக வெளியே வந்துவிட்டதாகவும், மேலும் 5 பேரின் நிலை என்னவென்று தெரியவில்லை என்றும் என்.எச்.கே செய்தி வெளியிட்டுள்ளது.

ஜப்பானில் நேற்று ஏற்பட்ட நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு நிவாரணப் பொருட்களை ஏற்றிக்கொண்டு குறித்த கடலோர காவல்படை விமானம் நிகாட்டா விமான நிலையத்திற்கு செல்லவிருந்ததாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஜப்பான் எயார்லைன்ஸ் விமானத்தின் உள்ளே இருந்த அனைத்து பயணிகளும் காற்று நிரப்பப்பட்ட சாய்தளம் மூலம் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)



# உயிருக்கு போராடும் விலங்குகள்!

ஜெருசலேம், ஜன. 03

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையேயான போரினால் காசாவின் வன உயிரியல் பூங்காக்களில் உள்ள விலங்குகள் பட்டினியால் தவிப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் பல விலங்குகள் உயிரிழந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன் சிங்கங்களுக்கு கோழி இறைச்சிக்கு பதிலாக வாரத்திற்கு ஒருமுறை பாண் வழங்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்தநிலையில் சிங்கங்களின் எடை குறைவடைந்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

# மணிப்பூரில் 3 பேர் சுட்டுக் கொலை!

இம்பால், ஜன. 03

மணிப்பூர் மாநிலத்தில் மூன்று பேர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். ஆயுதம் ஏந்திய சிலர் இந்த குற்ற செயலை அரங்கேற்றியுள்ளனர். இந்த சம்பவம் தௌபால் மாவட்டத்தில் உள்ள லிலாங் பகுதியில் நடந்துள்ளது.

அதையடுத்து தௌபால், இம்பால் கிழக்கு, இம்பால் மேற்கு காக்சிங் மற்றும் பிஷ்ணுபூர் மாவட்டங்களில் ஊரடங்கு அமல் செய்துள்ளது அம்மாநில அரசு.

சட்ட ஒழுங்கு சீர்குலைந்த காரணத்தாலும், அசம்பாவித சம்பவங்கள் மற்றும் உயிர் சேதத்தை தடுக்கும் விதமாக கடந்த டிசம்பர் 31-ம் தேதி பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கு தளர்வு உத்தரவு ரத்து செய்யப்பட்டு முழு ஊரடங்கு உத்தரவு இம்பால் மேற்கு மாவட்டத்தில் உடனடியாக அமல் செய்யப்பட்டுள்ளது என அம்மாவட்ட நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

“இந்தச் சம்பவத்தை அரசு சாதாரணமாக எடுத்துக் கொள்ளவில்லை. குற்றவாளிகளை விரைந்து பிடிக்க மணிப்பூர் போலீசார் நடவடிக்கை எடுத்துள்ளனர். மக்கள் வன்முறையில் ஈடுபடுவதைத் தவிர்க்குமாறு கேட்டுக் கொள்கிறேன். குற்றவாளிகள் மீது சட்டப்படி கடுமையான நடவடிக்கை எடுப்போம் என்பதை உறுதி அளிக்கிறேன். அரசுக்கு ஒத்துழைப்பு கொடுக்கவும்” என அம்மாநில முதல்வர் பிரேன் சிங் தெரிவித்துள்ளார்.

உள்ளூர் மக்களை குறிவைத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்த தாக்குதலில் 5 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்த சம்பவத்துக்கு பிறகு ஆவேசமடைந்த மக்கள் வாகனங்களுக்கு தீ வைத்துள்ளனர். கடந்த சனிக்கிழமை அன்று அடையாளம் தெரியாத சிலர் மேற்கொண்ட தாக்குதலில் காவல் துறையை சேர்ந்த மூவர் காயமடைந்தனர்.

மணிப்பூரில் மைதேயி சமூகத்தினருக்கும், குகி சமூகத்தினருக்கும் இடையே கடந்த மே 3-ம் தேதி மோதல் ஏற்பட்டது. இந்த கலவரத்தில் இதுவரை 180 க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். 700-க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். பலர் வீடுகளை இழந்து அகதிகளாகி உள்ளனர்.

# 20 இலட்சம் சுற்றுலா பயணிகளை இலங்கைக்கு அழைத்து வர திட்டம்!

கொழும்பு, ஜன. 03

**2023 ஆம் ஆண்டு 14 இலட்சத்து 66 ஆயிரத்து 556 வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளார்கள். இந்த ஆண்டு சுமார் 20 இலட்சத்துக்கும் அதிகமான சுற்றுலா பயணிகளை நாட்டுக்கு அழைத்து வர எதிர்பார்த்துள்ளதாக சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.**

2022 ஆம் ஆண்டு நாடு மிக மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டிருந்த வேளை நாட்டுக்கு சுமார் 7 இலட்சத்து 19 ஆயிரத்து 978 சுற்றுலா பயணிகள் மாத்திரமே வருகை தந்திருந்தனர்.

எரிபொருள் தட்டுப்பாடு, மின்சார விநியோகம் துண்டிப்பு மற்றும் சமூக கட்டமைப்பின் அமைதியின்மை ஆகிய காரணிகளால் சுற்றுலா பயணிகளின் வருகை வீழ்ச்சியடைந்ததாக சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகார சபை குறிப்பிடுகிறது.

2023 ஆம் ஆண்டு பொருளாதார மற்றும் சமூக கட்டமைப்பின் ஸ்திரத்தன்மை உறுதிப்படுத்தப்பட்டதை தொடர்ந்து வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் வருகை ஒவ்வொரு மாதமும் உயர்வடைந்துள்ளன.

கடந்த ஆண்டு மாத்திரம் 14 இலட்சத்துக்கும் அதிகமான சுற்றுலா பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளார்கள். சுற்றுலா பயணிகளின் வருகையை அதிகரிப்பதற்கு சுற்றுலா துறை அபிவிருத்தி அமைச்சு பல விசேட செயல்திட்டங்களை அறிமுகப்படுத்தியது.

பல நாடுகளுக்கு விசேட சலுகைகள் வழங்கப்பட்டன. இதற்கமைய இந்த ஆண்டு சுமார் 20 இலட்சம் சுற்றுலா பயணிகளை நாட்டுக்கு அழைத்து வர சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை எதிர்பார்த்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# மரக்கறி விலை அதிகரிப்பு!

கொழும்பு, ஜன. 03

நாட்டில் உள்ள பொருளாதார மத்திய நிலையங்களில் மரக்கறிகளின் விலைகள் சடுதியாக அதிகரித்துள்ளன. நுவரெலியா மாவட்டத்தில் தற்போது காணப்படுகின்ற தொடர் மழையுடன் கூடிய காலநிலை காரணமாக மரக்கறி உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக மரக்கறிகளின் விலைகள் வேகமாக அதிகரித்துள்ளன.

நுவரெலியா பொருளாதார மத்திய நிலையத்தின் தலைவரும் அகில இலங்கை ஒன்றிணைந்த விசேட பொருளாதார நிலையத்தின் ஆலோசகருமான அருண சாந்த ஹெட்டியாராச்சி இது தொடர்பில் கருத்து வெளியிடுகையில் கூறியவை வருமாறு,

"வரலாறு காணாத வகையில் தற்போதைய மரக்கறிகளின் விலைகள் உயர்ந்துள்ளன. கோவா ஒரு கிலோ 470 முதல் 490 ரூபா வரையிலும், கரட் ஒரு கிலோ 660 முதல் 680 ரூபா வரையிலும், பீட்ரூட் ஒரு கிலோ 350 முதல் 370 ரூபா வரையிலும், தக்காளி ஒரு கிலோ 400 முதல் 450 ரூபா வரையிலும் விற்பனை செய்யப்படுகின்றது.

அத்துடன் போஞ்சி ஒரு கிலோ 600 முதல் 650 ரூபா வரையிலும், ஒரு கிலோ பச்சை மிளகாய் 1,500 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றது.

இவ்வாறு இலங்கை வரலாற்றில் முதன் முறையாக மரக்கறிகளின் விலை அதிகளவிற்கு அதிகரித்த போதிலும் விவசாயிகளுக்கு எவ்வித இலாபமும் கிடைக்கவில்லை.

அதேநேரம் மரக்கறிகளின் விலை அதிகரிப்பு காரணமாக நுகர்வோர் மரக்கறிகளை கொள்வனவு செய்வதை தவிர்த்து வருவதாகவும் நுவரெலியா பொருளாதார மத்திய நிலையத்தின் தலைவர் அருண சாந்த ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

# 4 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 03

4 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் தெரிவித்துள்ளது.

இதன்படி, பதுளை, கண்டி, நுவரெலியா மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பலத்த மழையின் காரணமாக, கொழும்பின் பல வீதிகள் நீரில் மூழ்கின. இதன் காரணமாக போக்குவரத்து நெரிசலும் நிலவியதாக தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, தொடரும் சீரற்ற காலநிலை காரணமாக லுணுகலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட 19ஆம் கட்டை பழைய தொழிற்சாலை பிரிவில், மண்சரிவு அபாயம் காரணமாக 115 குடும்பங்களை சேர்ந்த 400 பேர் இடம்பெயர்ந்துள்ளனர்.

அவர்கள் ஹெறபட்டன் 19ஆம் கட்டை விக்னேஸ்வரா தமிழ் வித்தியாலயத்தில் தற்காலிகமாக தங்கவைக்கப்பட்டுள்ளனர். (ஐ)

# அமைச்சர் கெஹலிய வீட்டுக்கு முன் புத்தாண்டுப் பரிசாக மலர்வளையம்!

கொழும்பு, ஜன. 03

அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் கொழும்பில் உள்ள அதிகாரப்பூர்வ இல்லத்துக்கு முன்பாக நேற்று முன் தினம் காலை மலர்வளையம் வைக்கப்பட்டுள்ளது.

சிவில் செயற்பாட்டாளர்கள் மூவரே, புத்தாண்டு தினமான நேற்று முன் தினம், அமைச்சர் கெஹலியவுக்கான பரிசு இது எனக் குறிப்பிட்டு மலர்வளையத்தை கொண்டு வந்துள்ளனர்.

கெஹலிய ரம்புக்வெல சுகாதார அமைச்சராக பதவி வகித்த காலத்தில் இடம்பெற்றதாகக் கூறுப்படும் மோசடிகள், மருந்து கொள்வனவு மோசடிகள் தொடர்பில் அவர் கைது செய்யப்பட வேண்டும் என வலியுறுத்தினர்.

வீட்டுக்கு முன்னால் வந்த செயற்பாட்டாளர்கள் மூவர், மலர்வளையத்தை கொடுக்க முற்பட்டனர். எவரும் வாங்க வில்லை. அவ்விடத்துக்கு பொலிஸாரும் வந்தனர். இறுதியில் கடிதமொன்றை கையளித்துவிட்டு, மலர்வளையத்தை வீட்டுக்கு முன்பாக வைத்துவிட்டு புறப்பட்டனர். (அ)

# துரித பொருளாதார அபிவிருத்திக்காக கடின தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன!

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க



கொழும்பு, ஜன. 03

சரியான தீர்மானங்களுடன் இந்த வருடத்துக்குள் இலங்கையை துரித பொருளாதார அபிவிருத்தியை நோக்கி கொண்டு செல்வோம். அதற்குத் தேவையான கடினமான தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டாலும், நாட்டின் நலன் கருதிய தீர்மானங்களையே தான் மேற்கொண்டுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

விமானப் படையின் புதிய தலைமையகம் நேற்று முன்தினம் பத்தரமுல்லையில் திறந்து வைக்கப்பட்டது.

அதில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இன்று நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப வேண்டிய போராட்டத்தை எதிர்கொண்டுள்ளோம். நான் ஜனாதிபதியாக நாட்டை பொறுப்பேற்ற போது, நாட்டின் பொருளாதாரம் முழுமையாக சரிவடைந்திருந்தது. நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப்பட்டது.

இங்கு அரசியல் செய்வதா? இல்லாவிட்டால் நாட்டின் பொருளாதாரத்திற்காக பணியாற்றுவதா? என நேரடியாக அமைச்சரவையுடன் ஆலோசிக்க நேர்ந்தது.

பொருளாதார வேலைத் திட்டத்தை இரு வருடங்கள் காலம் தாழ்த்தியதால் லெபனான் பெரும் பிரச்னைகளை எதிர்கொண்டது. அரசியல் ஸ்திரமற்ற நிலைமையால் கிரேக்கம் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள 13 வருடங்கள் திண்டாடியது. அவர்கள், அரச ஊழியர்களின் சம்பளத்தை 50 சதவீதமாக குறைக்க நேர்ந்தது.

இருப்பினும் நாம் அந்த நிலைமைக்கு செல்லவில்லை. சரிவடைந்து கிடந்த எமது மொத்த தேசிய உற்பத்தி எமது நேரடி தீர்மானங்களின் பலனாக முன்னேற்றம் கண்டது. 2023 ஆண்டு இறுதியில் ஓரளவு வலுவான பொருளாதார நிலைமை உருவாகியுள்ளது.

நாட்டின் பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதற்கான தீர்மானங்களை, சரியான நேரத்தில் மேற்கொள்ள வேண்டும். இவ்வருடத்தில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி வேகம் 3வீதமாக அமையும் என நம்புகிறேன்.

பின்னர் அதனை மிஞ்சிய வளர்ச்சி ஏற்படும். எமக்கு ஒத்துழைப்பு வழங்க பல்வேறு நாடுகள் முன்வந்துள்ளன. எதிர்காலத்தில் இந்த கடன்களை செலுத்தும் இயலுமை எம்மிடம் உள்ளதா என்பதே அவர்களின் கேள்வியாகவுள்ளது. அதனால் நாம் புதிய வருமான வழிமுறைகளைத் தேடிக் கொள்ள வேண்டும்.

இந்தத் தீர்மானங்களை மேற்கொள்ள தவறினால் முன்னைய பொருளாதார நிலைமையை நாம் மீண்டும் சந்திக்க நேரிடும். இந்த வேலைத்திட்டத்தை தொடர்ச்சியாக முன்னெடுக்கும் பட்சத்தில் நாட்டுக்கு நல்ல எதிர்காலம் கிட்டும். அதனால் நாட்டின் நலனுக்காக இந்தத் தீர்மானங்களை எடுத்தோம்.

அனைவரும் ஒன்றுபடும் பட்சத்தில் 2024 ஆம் ஆண்டுக்குள் நாட்டிற்குள் மிகத் துரிதமான அபிவிருத்தியை ஏற்படுத்த முடியும் என்பதில் சந்தேகமில்லை -என்றார். (அ)

# வற் வரியால்தான் பதவி இழந்தார் கோட்டாபய!

## ரணிலுக்கும் அதுதான் நடக்கும் என்கிறார் ராதாகிருஷ்ணன்

கொழும்பு, ஜன. 03

கோட்டாபய ராஜபக்ச அன்று வற் வரியை குறைத்து தனது பதவியை இழந்தார். ரணில் விக்கிரமசிங்க இன்று வற் வரியை அதிகரித்து தனது பதவியை இழக்கப்போகின்றார். வற்வரி அதிகரிப்பையே இந்த அரசு மக்களுக்கு பரிசாக வழங்கியுள்ளது - என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.



மலையக மக்கள் முன்னணியின் ஸ்தாபகத் தலைவர் அமரர் சந்திரசேகரனின் 14 ஆவது சிராந்த்த தின நிகழ்வு நேற்று முன் தினம் திங்கட்கிழமை, ஹட்டனில் உள்ள மமமுவின் தலைமை காரியாலயத்தில் நடைபெற்றது.

இதன்போது உரையாற்றி ராதாகிருஷ்ணன் மேலும் கூறியவை வருமாறு,

விலை அதிகரிப்பு, பொருட்கள் தட்டுப்பாடு போன்ற செய்திகளே புத்தாண்டில் வெளிவருகின்றன. இந்நிலையில் வற் வரி அதிகரிப்பால் நடுத்தர மற்றும் கீழ் மட்டங்களில் உள்ளவர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். ஏனையவர்களுக்கும் பெரும் தாக்கம் ஏற்பட்டுள்ளது.

இந்த வருடம் தேர்தல் வருடம், இந்த அரசை விரட்ட மக்கள் தீர்மானித்துவிட்டது. எனவே, தோல்விக்காக இந்த அரசு காத்திருக்கின்றது என்றே கூற வேண்டும்-என்றார். (அ)

# விசேட தேவையுடைய பிள்ளைகளை பதிவு செய்வது கட்டாயமாக்கப்பட்டது

கொழும்பு, ஜன. 03

வலயக் கல்வி அலுவலகங்களில் விசேட தேவையுடைய பிள்ளைகளை பதிவு செய்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

விசேட தேவையுடைய குழந்தைகளுக்கு முறையான கல்வியை வழங்கும் விதமாகவே குறித்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை குறித்த பிள்ளைகளை உரிய வயதில் பாடசாலைகளுக்கு முதலாம் தரத்திற்கு அனுப்புவது தொடர்பான பாடத்திட்டத்தையும் அமைச்சு தயாரித்து மதிப்பீட்டுக் குழுக்களுக்கு வழங்கியுள்ளதாகவும், கடுமையான ஊனமுற்ற குழந்தைகளுக்கு வீட்டில் கற்பிக்கும் திட்டம் செயல்படுத்தப்படும் என்றும், அத்தகைய மூன்று குழந்தைகளுக்கு ஒரு ஆசிரியர் பணியமர்த்தப்படுவார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் ஒவ்வொரு வருடமும் சுமார் 7000 ஊனமுற்ற குழந்தைகள் பதிவாகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

## பருத்தித்துறை...

வேலாயுதம் புவனேஸ்வரம் என்ற 46 வயதானவரும் வேலாயுதம் ரவி என்கிற 38 வயதானவருமே உயிரிழந்தனர்.

களஞ்சியசாலையில் இருந்த சிலிண்டர் தீ விபத்துக்கு காரணமாக இருக்குமா என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

தீப்பற்றியமைக்கான காரணம் தெரியவராத நிலையில் சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை நீதவான் பொன்னுத்துரை கிரிஷாந்தன், தடயவியல் பொலிஸார், பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (அ-02)

## சஜித்துடன்...

ஆகியோர் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் ஒன்று கூடி எதிர்வரும் ஜனாதிதிபதித் தேர்தலை கருத்தில் கொண்டு மாபெரும் அரசியல் கூட்டணியை உருவாக்குவதற்கான நடவடிக்கையை அறிவித்தனர்.

இந்நிலையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஷான் விஜயலால், எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் வைத்து, ஐக்கிய மக்கள் சக்தியில் நேற்று முன் தினம் உத்தியோகபூர்வமாக இணைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## சிறுபான்மை...

ஆனால், அவ்வாறான பேச்சுகள் எதுவும் இதுவரை இடம்பெறவில்லை யென அக்கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். இவ்வாறான பின்புலத்திலேயே சிறுபான்மை கட்சிகளுடன் தம்மிக பெரேரா பேச்சுகளை ஆரம்பித்துள்ளார். (அ)

## பழுதடைந்த...

சாலையில் பழுதடைந்த உருளைகிழங்கு விதைகள் பொலித்தீன் பையில் பாதுகாப்பாக அகற்றி விவசாய நிலங்கள், நிலத்தடிநீர் மற்றும் குடியிருப்புக்களை பாதிக்காத வகையில் புதைக்கப்படவுள்ளது.

விவசாய திணைக்களத்தின் கண்காணிப்பில் மூன்று அடி ஆழத்திற்கு கீழே பாதுகாப்பு முறைமைகளை கையாண்டு சில தினங்களுக்குள் பழுதான உருளைக்கிழங்கு விதைகள் புதைக்கப்படவுள்ளன.

இதன் மூலம் பொதுமக்களுக்கோ விவசாயிகளுக்கோ மண்ணுக்கோ நிலத்தடி நீருக்கோ பாதிப்பு ஏற்படாது என துறைசார் தரப்புகள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பிலான கலந்துரையாடல் திணைக்கள தலைவர்கள், துறைசார் அதிகாரிகள் விவசாயிகளுக்கும் இடையே கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

இதன்போது உருளைக்கிழங்கு விதைகளை பொலித்தினில் பொதி செய்து பாதுகாப்பாக களஞ்சியசாலையில் இருந்து அகற்றி பாவனையற்ற வெளியான பகுதிகளில் புதைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

உலக வங்கியின் நவீன விவசாய மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் மானிய அடிப்படையில் யாழ்ப்பாணத்திற்கு கிடைத்த 21 மெற்றிக் தொன் உருளைக் கிழங்கு விதைகள் குப்பிழானில் அண்மையில் களஞ்சியப்படுத்தப் பட்டிருந்தது.

அவுஸ்திரேலியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட குறித்த விதை உருளைக் கிழங்குகள் பெக்டோ பெக்டீரியம் கெரெட்டோபோரம் எனப்படும் பற்றீரியா தாக்கத்துக்கு உள்ளானமையால் பழுதடைந்திருந்தமை தொடர்பில் கடந்த டிசெம்பர் 17ஆம் திகதி கண்டறியப்பட்டது.

குறித்த பற்றீரியா தாக்கத்தினால் 21 மெற்றிக் தொன் விதை உருளைக்கிழங்குகளையும் பயன்படுத்த முடியாத நிர்ப்பந்தம் தற்போது ஏற்பட்டுள்ளது. (அ)

## மதுபானசாலை...

வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ச. சுகிர்தனும் இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

இன்று புதன்கிழமை கடையடைப்பு போராட்டத்தை முன்னெடுப்பது என்றும் அத்துடன், உடுப்பிட்டி சந்தியில் கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்துவது எனவும் இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

உடுப்பிட்டியில் பாடசாலை மற்றும் மதத் தலங்களுக்கு அண்மையாக குடிமனைகளுக்கு மத்தியில் மதுபானசாலை ஒன்று அண்மையில் திறக்கப்பட்டது. இந்த மதுபானசாலையை அகற்றுமாறு உடுப்பிட்டி மக்களும் பொது அமைப்புகளும் வலியுறுத்தியிருந்தன. இந்த மதுபானசாலைக்கான அனுமதி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பணிப்பின் பேரிலேயே வழங்கப்பட்டதாக கரவெட்டி பிரதேச செயலர் கூறியிருந்தார்.

இதையடுத்து இந்த மதுபானசாலையை அகற்றுமாறு கோரி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை உடுப்பிட்டி சமூக மட்ட அமைப்புகள் கடந்த டிசெம்பர் 19ஆம் திகதி சந்தித்து கலந்துரையாடின. தான் நேரில் வந்து இரு நாட்களில் தீர்வு தருவதாக அவர் உறுதியளித்திருந்தார். எனினும், இரு வாரங்கள் கடந்தும் இந்த விடயத்துக்கு அவர் தீர்வை முன்வைக்க வில்லை.

உடுப்பிட்டி மதுபானசாலை விவகாரம் தொடர்பில் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் கவனத்துக்கு கடந்த டிசெம்பர் 28ஆம் திகதி நடந்த கூட்டத்தில் கஜேந்திரன் எம். பி. கொண்டுவந்திருந்தார். எனினும், இதற்கும் சரியான தீர்வு முன்வைக்கப்படவில்லை. இந்த நிலையிலேயே இன்றைய தினம் கடையடைப்பு மற்றும் கண்டன ஆர்ப்பாட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-02)

## டெங்கு பரவல்...

அவர்களில் மூவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர்.

குறிப்பாக யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் மற்றும் சண்டிலிப்பாய் ஆகிய பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட இடங்களில் டெங்கு நுளம்பின் தாக்கம் அதிகரித்துக் காணப்படுகின்றன. எனவே, பொதுமக்கள் தங்கள் உடல்நிலை தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும். அத்துடன் தம்மை சுற்றியுள்ள இடங்களையும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும் - என்றார். (அ)

## யாழில் டெங்கு...

கூடுதலான தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கின்றது. டெங்கு எமது பகுதியில் மழை காலப்பகுதியில் வருடா வருடம் தாக்கத்தை ஏற்படுத்துவது தொடர்ந்து நடைபெறுகின்ற விடயமாக காணப்படுகின்றது.

இதனை சரியான முறையில் கையாளும் போது டெங்கு ஏற்படாமல் ஆரம்பத்திலேயே தடுக்க முடியும். இது எங்களுடைய அன்றாட பழக்கவழக்கத்தில் தங்கி இருக்கின்றது.

எனவே தேவையற்ற பொலித்தீன், பிளாஸ்ரிக் பாவனை, தண்ணீர் தேங்கி நிற்கக்கூடிய சிரட்டைகளில் இருந்து ரயர்கள் மற்றும் ஏனைய விடயங்களை கிரமமாக அகற்றவேண்டும். முக்கியமாக இந்த மழை காலத்திற்கு முதல் அகற்ற வேண்டும்.

தற்போது இந்த டெங்கு நோயானது உச்சக்கட்டத்தை எட்டி உள்ளது. ஆனால், நோய் உச்சக்கட்டத்திற்குபோன பின்னர் தான் டெங்கை கட்டுப்படுத்த வேண்டும் என முனைகின்றோம்.

ஒரு தொற்று நோயானது உச்ச கட்டத்தை அடைந்த பின்னரே படிப்படியாக குறைவடையும். எனவே, எதிர்வரும் காலத்திலாவது டெங்கு நோயை மழை காலம் ஆரம்பமாகும் போது கட்டுப்படுத்துவதற்கு முற்பட வேண்டும்-என்றார். (அ)

## சுகாதார...

சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்களின் ஊடாக முன்னெடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் வைத்தியர் ரமேஷ் பத்திரண மேலும் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே கைத்தொழில் மற்றும் சுகாதார அமைச்சர் ரமேஷ் பதிரண இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்-

இந்நாட்டு மக்களுக்கு இலவச சுகாதார சேவையின் கீழ், உயர் தரத்திலான மருந்துகளை வழங்கும் வேலைத்திட்டம் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப் பட்டு வருகின்றது. கோவிட் நெருக்கடிக்குப் பிறகு நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்ததால், ஒரு சில மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டது. தற்போது, நாட்டின் நிதி நிலை சீராக முன்னேறி வருவதால், அத்தியாவசிய மருந்துகளை பெற, அரசின் கொள்முதல் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

மருத்துவமனைகளுக்கு மருந்துப் பொருட்களைப் பெறுவதற்கான செயல்முறையை வெளிப்படையானதாக மாற்றும் நோக்கத்துடன், கொள்முதல் நடவடிக்கைகளை டிஜிற்றல் மயமாக்கத் தேவையான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்காக கொழும்பு மற்றும் மொரட்டுவ பல்கலைக்கழகங்களின் கணனிப் பிரிவுகளின் ஆலோசனைகள் பெறப்படுகின்றன. அதன்படி, எதிர்காலத்தில் குறித்த கொள்முதல் நடவடிக்கைகளை டிஜிற்றல் மயமாக்கல் மூலம் மேற்கொள்ள எதிர்பார்த்துள்ளோம்.

மேலும் , இவ்வருட வரவு - செலவுத் திட்டத்தில் ஔடதக் கட்டுப்பாட்டு அதிகார சபையின் தர ஆய்வு கூடத்தை மேம்படுத்துவதற்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நிதி ஒதுக்கீடு செய்துள்ளார். அதன் கொள்திறன், மனித வளம் மற்றும் அதன் கட்டமைப்பு மாற்றங்களை இந்த வருடத்தில் மேற்கொள்ள முடியும்.

மேலும், இந்நாட்டுக்குத் தேவையான 850 வகையான அத்தியாவசிய மருந்து வகைகள் இனங்காணப்பட்டுள்ளன. அந்த மருந்துகளில் மக்களின் உயிர் காக்கும் அனைத்து மருந்துகளும் எங்களிடம் உள்ளன. கண்களுக்குத் தேவையான லென்ஸ்கள், இதய நோயாளிகளுக்கான அறுவை சிகிச்சை உபகரணங்கள் (ஸ்டென்ஸ்), எலும்பியல் அறுவை சிகிச்சை உபகரணங்கள் மற்றும் ஏனைய உபகரணங்கள் தொடர்பில் நாம் அதிக கவனம் செலுத்தியுள்ளோம்.

கடந்த வருடம் டெங்கு நோயினால் 50 பேர் உயிரிழந்துள்ளனர். இது மிகவும் கவலையான நிலை. டெங்கு நோயை அரசாங்கத்தினால் மாத்திரம் கட்டுப்படுத்த முடியாது. அதற்கு ஒட்டுமொத்த சமூகத்தின் ஒத்துழைப்பும் இருக்க வேண்டும். அத்துடன், பாதுகாப்புப் படை உறுப்பினர்களின் உதவியுடன் சூழல் சுத்திகரிப்பு வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. முடிந்தவரை சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்திருப்பதன் மூலம் டெங்கு நோயைக் கட்டுப்படுத்தலாம்.

தட்டம்மை நோயை ஒழித்துள்ள நாடாக உலக சுகாதார ஸ்தாபனம் இலங்கையை அடையாளங்கண்டுள்ளது. ஆனால், கடந்த வருடம் சுமார் 700 அம்மை நோயாளர்கள் பதிவாகியுள்ளமை தொடர்பில் சுகாதார அமைச்சு விசேட கவனம் செலுத்தியுள்ளது.

சில காரணங்களால், தட்டம்மை நோய்க்கு எதிரான நோய் எதிர்ப்புச் சக்தியின் அளவு குறைவாக உள்ளதால் தற்போது நாட்டில் மீண்டும் தட்டம்மை நோய் ஏற்படுவதாக நம்பப்படுகிறது. எனவே, இந்த நிலையை கட்டுப்படுத்த வேண்டியது அவசியமாகும்.

அதன்படி, ஜனவரி மாதம் இரண்டாவது வாரத்தில் இருந்து நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து சுகாதார வைத்திய உத்தியோகத்தர் அலுவலகங்கள் ஊடாக நோய்த்தடுப்பு தடுப்பூசியை வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன. தட்டம்மை நோயை தடுக்கும் வகையில் குழந்தைகளுக்கு தேவையான தடுப்பூசிகளை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு பெற்றோரை கேட்டுக் கொள்கிறோம்.

இது தவிர, இந்தியாவில் பதிவாகி வரும் புதிய ஜே.என் 1 கோவிட் பிறழ்வு குறித்து இந்நாட்களில் எமது நாட்டிலும் கருத்தாடல் இடம்பெற்று வருகின்றது. தற்போது உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளபடி, இது தொடர்பாக தேவையற்ற அச்சம் கொள்ள வேண்டாம். ஜே.என் 1 கோவிட் பிறழ்வு குறித்து சுகாதார அமைச்சு தொடர்ந்து கண்காணித்து வருகிறது.

மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆதரவுடன், இது தொடர்பாக மாதிரி சோதனைகள் நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதுவரை மேற்கொள்ளப்பட்ட சோதனைகளில், இந்தியாவில் பதிவாகியுள்ள புதிய கொவிட் பிறழ்வு கொண்ட நோயாளிகள் யாரும் பதிவாகவில்லை. ஆனால் கடந்த கொவிட் காலத்தில் பின்பற்றப்பட்ட சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுமாறு பொதுமக்களை கேட்டுக் கொள்கிறோம்-என்றார். (அ)

## குடும்பத்தோடு...

கம்பஹாவில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசாங்கத்தின் வருவாயை அதிகரிக்க வற் வரி அதிகரிக்கப்பட்டாலும், அரசாங்கத்தின் வருவாயை அதிகரிக்க ஒரே வழி வற் வரியை அதிகரிப்பது அல்ல, மாறாக நாட்டிலிருந்து திருடப்பட்ட பணத்தை நாட்டிற்கு திரும்பப் பெறுவதற்கான கட்டமைப்பை ஸ்தாபிப்பதே பொருத்தமான வழி.

திருடர்களை நம்பி ஜனாதிபதி, பிரதமர் போன்ற பதவிகளைப் பெற்றதாலேயே தற்போதைய அரசாங்கத்தால் அதனை மேற்கொள்ள முடியாதுள்ளது. எனவே, திருடர்களைப் பிடிப்பதற்குப் பதிலாக திருடர்களைப் பாதுகாத்து வரும் வேலையையே தற்போதைய அரசாங்கம் முன்னெடுத்து வருருகிறது.

இம்யூனோகுளோபுலின் தடுப்பூசி குப்பிகள் உள்ளிட்ட மருந்துத் துறையில் சமீபத்தில் நடந்த திருட்டு, ஊழல் மற்றும் மோசடிகள் தொடர்பாக சுகாதார அமைச்சருக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டு வந்த போது, அதனை தோற்கடிக்க 113 உறுப்பினர்கள் கைதூக்கினர்.

அவர்கள் இந்நாட்டை வங்குரோத்து நிலைக்கு கொண்டு சென்ற திருடர்கள் கூட்டமே. அவர்கள் திருடிய வளங்களை மீண்டும் எமது நாட்டிற்கு கொண்டு வர முடியுமாக இருந்தால், இவ்வாறு வரியை அதிகரிக்க வேண்டிய அவசியம் இல்லை.

ஐக்கிய மக்கள் சக்தியினால் அமுல்படுத்தப்படும் மூச்சுத் திட்டத்தின் கீழ் 56 அரச வைத்தியசாலைகளுக்கு 17 கோடியே 19 இலட்சத்து 66 ஆயிரத்து 900 ரூபாய் பெறுமதியான வைத்திய சாலை உபகரணங்கள் இதுவரை வழங்கப்பட்டுள்ளன.

பிரபஞ்சம் பஸ் திட்டத்தின் கீழ் 80 அரச பாடசாலைகளுக்கு 50 இலட்சம் ரூபாய் பெறுமதியான 80 பஸ்கள் வழங்கப்பட்டுள்ளதோடு 38 கோடியே 92 இலட்சம் ரூபாய் இதற்காக செலவிடப்பட்டுள்ளது.

பிரபஞ்சம் ஸ்மார்ட் வகுப்பறைகள் திட்டத்தின் கீழ் 59 அரச பாடசாலைகளுக்கு 5 கோடியே 62 இலட்சம் ரூபாய் பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன- என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu

# 2024 ஜனவரி முதலாம் திகதி முதல் உற்பத்தி செய்து சந்தைக்கு வரும் பொருள்களுக்கு மட்டுமே வற் வரி!

## நுகர்வோர் விவகார அதிகாரசபை அறிவிப்பு

கொழும்பு, ஜன. 03

**நாட்டில் நடைமுறைக்கு வந்துள்ள 18 வீத வட் வரியானது, இந்த ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் உற்பத்தி செய்யப்பட்டு சந்தையில் வெளியிடப்படும் பொருட்களுக்கு மாத்திரமே பொருந்தும் என நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.**

அந்தவகையில், 2024 ஆம் ஆண்டுக்கு முன்னர் சந்தையில் வெளியிடப்பட்ட பொருட்களுக்களுக்கு இந்தி அதிகரித்த வற் வரி அடிப்படையிலான பொருந்தாது என அதிகாரசபை குறிப்பிட்டுள்ளது.

எனவே, சந்தையில் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாகவும், தன்னிச்சையாக விலைகளை அதிகரிக்கும் வர்த்தகர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், இந்த விடயம் குறித்து கருத்து வெளியிட்ட பேராசிரியர் வசந்த அத்துக்கோரள, வற் வரியால், நாட்டில் பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகள் கணிசமாக அதிகரித்துள்ளன என்றும் எரிபொருள் மற்றும் எரிவாயுவின் விலைகள் அதிகரித்துள்ளதுடன், போக்குவரத்துக் கட்டணங்களும் அதிகரித்துள்ளதாகத் தெரிவித்தார்.

இது நாட்டின் கிராமப்புற மக்களை விட நகர்ப்புற நடுத்தர வர்க்கத்தினரையும், வறிய மக்களையுமே அதிகம் பாதிக்கும் என பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளாதார மற்றும் புள்ளியியல் துறையின் பேராசிரியர் வசந்த அத்துக்கோரள தெரிவித்துள்ளார். (அ)

# மட்டக்களப்பு மக்களுக்கு எச்சரிக்கை

மட்டக்களப்பு, ஜன. 03

மட்டக்களப்பின் உன்னிச்சை, அம்பாறை ரம்புக்கன் ஓயா ஆகியவற்றின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளமையால் அப்பிரதேச மக்களை எச்சரிக்கையாக இருக்குமாறு அனர்த்த முகாமைத்துவ நிலையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

மட்டக்களப்பில் கடந்த 24 மணி நேரத்தில் 169.4 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ள நிலையில் உன்னிச்சை, நவகிரி, வடமுனை, வெலியாகந்தை குளங்களின் நீர் மட்டம் அதிகரித்துள்ளன.

இதன் காரணமாக உன்னிச்சை குளத்தின் 3 வான்கதவுகளும், நவகிரிகுளம், றூகம்குளம், வடமுனைகுளங்களின் வான் கதவுகள் திறந்துவிடப்பட்டுள்ளன.

அதேவேளை அம்பாறை ரம்புக்கன் ஓயாவின் வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ள மையால் மட்டக்களப்பு செங்கலடி, சித்தாண்டி பகுதியில் வெள்ளம் ஏற்படும் நிலைமை காணப்படுகின்றதுடன் மட்டு நவகிரிகுளம் வான்கதவு திறக்கப்பட்டுள்ளாதால் வெல்லாவெளி பிரதேச செயலகப் பிரிவிலுள்ள மக்களும் அவதானமாக இருக்குமாறு மாவட்ட அனர்த்த முகாமைத்துவம் அறிவித்துள்ளது.

இதேவேளை, கனமழையால் பல பிரதேசங்கள் வெள்ள நீரில் மூழ்கியுள்ளதால் அப்பகுதிகளில் போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளதோடு, வீடுகளில் வெள்ள நீர் புகுந்ததால் 56 குடும்பங்கள் முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# யாழில் டெங்குவை ஒழிப்பதற்கு களமிறங்கும் இராணுவத்தினர்!

யாழ்ப்பாணம், ஜன. 03

யாழ். மாவட்டத்தில் டெங்கு நோய் பரவலை கட்டுப்படுத்த இராணுவத்தினர் களமிறக்கப்பட்டுள்ளனர்.

யாழ். நகரம், நல்லூர், கோப்பாய் மற்றும் சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவுகளிலேயே அதிகளவான டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் குறித்த பகுதிகளில் டெங்கு நோய்ப் பரவலை கட்டுப்படுத்தும் விதமாக நேற்று முன்தினம் வடமாகாண பிரதம செயலாளர் தலைமையில் கூட்டமொன்று நடைபெற்றது.

குறித்த கூட்டத்தில் டெங்கு பரவலைக் கட்டுப்படுத்த சுகாதார திணைக்களம், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பொலிஸார், இராணுவம் ஆகியோரை ஈடுபடுத்த தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் குறித்த டெங்கு ஒழிப்பு நடவடிக்கைக்கு ஒத்துழைக்காதவர்கள் மீதும் கடுமையா நடவடிக்கை எடுக்கப் பணிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# மின்சார சபை ஊழியர் 3 நாள்கள் போராட்டம்

கொழும்பு, ஜன. 03

மின்சார சபையை மறுசீரமைப்பதற்கான உத்தேச சட்டமூலத்திற்கு எதிராக இன்று முதல் மூன்று நாட்கள் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பான சட்டமூலத்தை உடனடியாக மீளப்பெறுமாறு மின்சக்தி அமைச்சருக்கு அறிவிக்கவுள்ளதாக இலங்கை மின்சார ஊழியர் சங்கத்தின் செயலாளர் ரஞ்சன் ஜெயலால் தெரிவித்துள்ளார்.

இலங்கை மின்சாரசபையை ஜனாதிபதியுடன் சேர்ந்து மின்சக்தி அமைச்சர் விற்பனை செய்வதற்கு விரும்புவதாகவும், குறித்த சட்டமூலம் பாராளுமன்றத்தில் தன்னிச்சையாக நிறைவேற்றப்படுமாயின் பாரிய வேலை நிறுத்தப் போராட்டம் நடத்தப்படும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்த நிலையில், இலங்கை மின்சார சபையின் தலைமை அலுவலகத்திற்கு முன்பாக எதிர்வரும் மூன்று நாட்களுக்கு பாரியளவிலான கவனயீர்ப்பு போராட்டத்தை நடத்துவதற்கு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளதாக ரஞ்சன் ஜெயலால் தெரிவித்துள்ளார். (அ)

# வடமராட்சி கிழக்கில் இளைஞனின் சடலம்!

யாழ்ப்பாணம், ஜன. 03

வடமராட்சி கிழக்கு போக்கறுப்பு கிராம சேவகர் பிரிவிலுள்ள நித்தியவெட்டை பகுதியில் ஆண் ஒருவரின் சடலம் நேற்று செவ்வாய்க்கிழமை காலை மீட்கப்பட்டுள்ளது.

அதே பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய றாயு என்னும் இளைஞனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவம் நிகழ்ந்த பகுதிக்கு உடன் வருகை தந்து முள்ளியான் கிராமசேவகர் கி.சுபகுமார் சடலத்தை பார்வையிட்டுள்ளதுடன் பொலிஸாருக்கு தகவல் வழங்கினார்.

இளைஞனின் மரணம் தொடர்பில் உறவினர்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (அ-02)

# இரசாயன உரத்துக்கு வற் வரி விதிக்காதிருக்க நடவடிக்கை

கொழும்பு, ஜன. 03

இரசாயன உரத்திற்கு பெறுமதி சேர் வரியை (வற்) விதிக்காதிருப்பது தொடர்பில் அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளதாக விவசாய மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் போகத்தில் இருந்து அதனை நடைமுறைப்படுத்த தற்போது திட்டமிடப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் ஜனாதிபதியுடன் கலந்துரையாடப்பட்டுள்ளதாகவும், ஜனாதிபதி அது தொடர்பில் சாதகமான முறையில் பதிலளித்துள்ளார். பெரும்போக பயிர்ச் செய்கைக்கு அவசியமான அனைத்து இரசாயன உரங்களும் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.அந்த உரத்தொகையை பழைய விலைக்கே விவசாயிகளுக்கு வழங்கவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ)

# சீரற்ற காலநிலையினால் 20 ஆயிரம் பேர் பாதிப்பு!




கொழும்பு, ஜன. 03

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 20 ஆயிரத்தை நெருங்கியுள்ளது என அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய, 5 ஆயிரத்து 682 குடும்பங்களைச் சேர்ந்த 19 ஆயிரத்து 202 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அதில், கிழக்கு மாகாணத்தில் மாத்திரம், 4 ஆயிரத்து 804 குடும்பங்களைச் சேர்ந்த 16 ஆயிரத்து 206 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், ஊவா மாகாணத்தில் 761 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 586 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 3 வீடுகள் முழுமையாகவும், 361 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மழை மற்றும் மண்சரிவு காரணமாக பல வீதிகளின் போக்குவரத்துத் தடைப்பட்டுள்ளன. அதன்படி, மாத்தளை உக்குவெல - பண்டாரபொல வீதி, மண்சரிவினால் முற்றாக தடைப்பட்டுள்ளது.

மேலும் கண்டி - மஹியங்கனை பிரதான வீதியின் போக்குவரத்து முற்றாக நிறுத்தப்பட்டுள்ளதுடன் ஹஸலக்கிரிய பிரதேசத்தில் மண்மேடு சரிந்து வீழ்ந்தமையே இதற்குக் காரணம் என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

# டிஜிற்றல் மையம் அமைக்க அமைச்சரவை அங்கீகாரம்

கொழும்பு, ஜன. 03

இலங்கையில் மோசடி மற்றும் சட்டவிரோத நடவடிக்கைகளை தடுப்பதற்காக சர்வதேச ஏ2பி (Application -to-Person) குறுஞ்செய்தி சேவை டிஜிற்றல் மையத்தை நடைமுறைப்படுத்துவதற்கான தொழில்நுட்ப குழுவொன்றை நியமிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

குறுஞ்செய்தி முறையின் அதிகப்படியான பாவனையானது மோசடி மற்றும் சட்டவிரோத செயற்பாடுகளுக்கு வழிவகுத்துள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

எனவே, இதுபோன்ற சவால்களை எதிர்கொள்ள குறுஞ்செய்தி பரிமாற்றங்களை முறைப்படுத்த ஒரு மையப்படுத்தப்பட்ட குறுஞ்செய்தி அமைப்பு பாதுகாப்பு சாதன முறை தேவையானது அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, ஐக்கிய இராச்சியத்தை தளமாகக் கொண்ட தனியார் நிறுவனமான இன்போபிப் மூலம் சர்வதேச குறுஞ்செய்தி சேவை மையத்தை செயல்படுத்துவதற்கான முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பிரேரணை மற்றும் பரிந்துரைகளை மதிப்பீடு செய்வதற்காக நிதி அமைச்சு, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள், தொழில்நுட்ப அமைச்சு மற்றும் இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழு ஆகியவற்றின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய தொழில்நுட்பக் குழுவொன்றை நியமிப்பதற்கான ஜனாதிபதியின் முன்மொழிவுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 03.01.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இந்த ஆண்டு இறுதியில் ஓய்வு பெறுகிறார் முர்ரே



லண்டன், ஜன. 03

2024ஆம் ஆண்டில் நான் ரென்னிஸில் இருந்து ஓய்வு பெறுவேன் என்று பிரிட்டன் வீரர் அன்டி முர்ரே தெரிவித்துள்ளார்.

பிரிட்டனை சேர்ந்த மிகச் சிறந்த ரென்னிஸ் வீரர்களுள் ஒருவர் ஆன்டி முர்ரே. இதுவரை 2 முறை விம்பிள்டன் பட்டத்தை கைப்பற்றி சாதனை படைத்துள்ளார் முர்ரே.

ரென்னிஸ் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவது குறித்து நேற்றுமுன்தினம் அவர் கூறும்போது, "2024ஆம் ஆண்டில் நான் ரென்னிஸில் இருந்து ஓய்வு பெற முடிவு செய்துள்ளேன். ஜனவரியில் நடைபெறும் அவுஸ்திரேலியன் ஓப்பன் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் போட்டியில் பங்கேற்பேன். இந்த ஆண்டு முழுவதும் ரென்னிஸ் போட்டிகளில் பங்கேற்பேன்" என்றார். (ஐ)

# இந்தியாவுடனான டெஸ்ட் இன்று தென்னாபிரிக்க அணி அறிவிப்பு




கேப்டவுன், ஜன. 03

இந்திய கிரிக்கெட் அணியுடன் விளையாடவுள்ள 2ஆவது டெஸ்ட் போட்டிக்கான தென்னாபிரிக்க அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்கா சென்றுள்ள இந்திய கிரிக்கெட் அணி 3 இருபது - 20, 3 ஒருநாள், 2 டெஸ்ட் போட்டிகள் கொண்டதொடரில் விளையாடி வருகிறது. இரு அணிகளுக்கு இடையேயான முதல் டெஸ்ட் போட்டி கடந்த மாதம் 26ஆம் திகதி தொடங்கியது. இப்போட்டியில் இந்தியாவை இன்னிங்ஸ் மற்றும் 32 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி தென்னாபிரிக்கா அபார வெற்றிபெற்றது.

இந்நிலையில் இரு அணிகளுக்கும் இடையேயான 2ஆவது டெஸ்ட் போட்டி கேப்டவுன் மைதானத்தில் இன்று தொடங்குகிறது. இதையடுத்து இந்த டெஸ்ட் போட்டிக்கான தென்னாபிரிக்க அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

**அணி :** டீன் எல்கர் (கப்டன் ), டேவிட் பெடிங்காம், நந்த்ரே பர்கர், டோனி டி ஜோர்ஸி, ஜூபைர் ஹம்சா, மார்கோ யான்சன், கேசவ் மஹராஜ், எய்டன் மார்க்ரம், வியான் முல்டர், லுங்கி நிகிடி, கீகன் பீற்றர்சன், காகிசோ ரபாடா, டிரிஸ்டன் ஸ்டப்ஸ் , கைல் வெர்ரைன். (ஐ)

# ஒருநாள் போட்டிகளில் வோர்ணர் ஓய்வு!




சிட்னி, ஜன. 03

ஒருநாள் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார் டேவிட் வோர்ணர்.

ஏற்கனவே, பாகிஸ்தான் அணியுடனான டெஸ்ட் தொடரே தான் விளையாடும் கடைசி டெஸ்ட் தொடர் என அவர் அறிவித்திருந்தார். தற்போது அவுஸ்திரேலியா மற்றும் பாகிஸ்தான் அணிகள் டெஸ்ட் தொடரில் விளையாடி வருகின்றன. 3 போட்டிகள் கொண்ட இந்த தொடரின் கடைசி போட்டி இன்று சிட்னி கிரிக்கெட் மைதானத்தில் ஆரம்பமாகிறது. இந்த போட்டியே வோர்ணர் விளையாடும் கடைசி டெஸ்ட் போட்டி.

37 வயதான அவர் டெஸ்ட் கிரிக்கெட்டில் 8,695 ஓட்டங்கள் எடுத்துள்ளார்.

கடந்த 2009 முதல் சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் வோர்ணர் விளையாடி வருகிறார். இதுவரை 161 ஒருநாள் போட்டிகளில் 6,932 ஓட்டங்கள் எடுத்துள்ளார். 2015 மற்றும் 2023 உலகக் கிண்ணத் தொடர்களை வென்ற அணியில் வோர்ணர் இடம்பெற்றிருந்தார். நடப்பு ஆண்டில் ரி - 20 உலகக் கிண்ணத் தொடர் நடைபெறவுள்ளது. அதில் கவனம் செலுத்தவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். அதே நேரத்தில் அணிக்கு தேவைப்பட்டால் 2025 சம்பியன்ஸ் கிண்ணத்தில் விளையாட தயார் என்று கூறியுள்ளார்.

தனியார் ரி -20 கிரிக்கெட் போட்டிகளில் விளையாட உள்ளதாகவும், குடும்பத்தினருடன் தனது நேரத்தை செலவிட உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். அணிக்கு தேவை இருந்தால் ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் விளையாட தயார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

(ஐ)

# பங்களாதேஷுக்கு எதிரான ரி-20 தொடர்; இறுதிப்போட்டியில் நியூஸிலாந்து வெற்றி

மவுண்ட் மாங்கனுயி, ஜன. 03

பங்களாதேஷுக்கு எதிரான சர்வதேச இருபது - 20 கிரிக்கெட் போட்டியில் நியூஸிலாந்து 17 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றியை பெற்றது. இதையடுத்து இருபது - 20 தொடர் 1-1 என்ற கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

பங்களாதேஷ் கிரிக்கெட் அணி நியூஸிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 ஒருநாள் போட்டி மற்றும் 3 சர்வதேச ரி -20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. முதலில் நடைபெற்ற ஒருநாள் தொடரை நியூஸிலாந்து அணி 2-1 என்ற கணக்கில் கைப்பற்றியது.

இதையடுத்து இரு அணிகளுக்கும் இடையிலான சர்வதேச ரி -20 தொடர் நடைபெற்று வருகிறது. முதல் ரி -20 போட்டியில் பங்களாதேஷ் வெற்றி பெற்றது. 2ஆவது போட்டி மழையால் கைவிடப்பட்டது. இதனால் 3 போட்டிகள்கொண்ட ரி -20 தொடரில் பங்களாதேஷ் அணி 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் இருந்தது.

இந்நிலையில், இரு அணிகளுக்கு இடையிலான 3ஆவது மற்றும் கடைசி சர்வதேச டி20 போட்டி மவுண்ட்மாங்கனுயில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூஸிலாந்து அணி பந்துவீச்சை தெரிவு செய்தது.

இதையடுத்து, முதலில் களமிறங்கிய பங்களாதேஷ் அணி 19.2 ஓவர்களில் 110 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. சௌம்யா சர்க்கார் 4, ரானி தாலுட்கர் 10, அணித்தலைவர் ஷன்டோ17, தவ்ஹித் ஹிரிடோய் 16, அபிப் ஹொசைன் 14, ஷமிம் ஹொசைன் 9, மெஹதி ஹசன் 4, ரிஷத் ஹொசைன் 10,ஷோரிபுல் இஸ்லாம் 4, தன்வீர் இஸ்லாம் 8, முஸ்டாபிசுர் 3 ஓட்டங்கள் சேர்த்தனர்.

நியூஸிலாந்து சார்பில் மிட்செல் சான்ட்னர் 4 விக்கெட்களும், டிம் சவுதி, மில்ன், பென் சியர்ஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்களும் கைப்பற்றினர்.

இதையடுத்து 111 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய நியூஸிலாந்து 14.4 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 95 ஓட்டங்கள் எடுத்திருந்த போது மழை குறுக்கிட்டது. இதனால்



ஆட்டம் நிறுத்தப்பட்டது.

தொடர்ந்து மழை பெய்ததால் ஆட்டத்தைத் தொடர முடியாத நிலை ஏற்பட்டது. இதையடுத்து டக்வொர்த் லூயிஸ் முறைப்படி நியூஸிலாந்து 17 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

நியூஸிலாந்து தரப்பில் பின் ஆலன் 38, டிம் செய்பர்ட் 1, டேரில் மிட்செல் 1, கிளென் பிலிப்ஸ் 1, மார்க் சாப்மேன் ஓர் ஓட்டம் எடுத்தனர். ஆனால் ஜேம்ஸ் நீஷம், அணித்தலைவர் சான்ட்னர் ஆகியோர் அதிரடியாக விளையாடி ஓட்டங்களை குவித்தனர். நீஷம் 28 ஓட்டங்களும்,

மிட்செல் சான்ட்னர் 18 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தனர். இதையடுத்து, இரு அணிகளுக்கு இடையிலான 3 போட்டிகள் கொண்ட சர்வதேச ரி -20 கிரிக்கெட் தொடர் 1-1 என சமநிலையில் முடிந்துள்ளது.

நியூஸிலாந்தின் அணித்தலைவர் மிட்செல் சான்ட்னர் ஆட்ட நாயகன் விருதும், வங்கதேசத்தின் ஷோரிபுல் இஸ்லாம் தொடர் நாயகன் விருதும் பெற்றனர். (ஐ)

# சுட்டெரிக்கும் சூரியனை தொட்டுப் பார்க்க தயாராகும் நாசா - எப்படி சாத்தியம்?

ஜொனாதன் அமோஸ்


விண்வெளி ஆய்வு வரலாற்றில் தற்போதைய காலகட்டம் ஒரு குறிப்பிடத்தக்க தருணமாக இருக்கும் என்று உறுதியாகத் தெரிகிறது.


இன்னும் ஓராண்டு கழித்து, டிசம்பர் 24 அன்று, நாசாவின் ‘பார்க்கர் சோலார் ப்ரோப்’ மணிக்கு சுமார் 7 லட்சம் கிலோமீட்டர் வேகத்தில் சூரியனைக் கடந்து செல்லும்.

மனிதனால் இதுவரை உருவாக்கப்பட்ட எந்தப் பொருளும் இவ்வளவு வேகமாக நகர்ந்திருக்காது அல்லது உண்மையில் சூரியனுக்கு மிக அருகில் சென்றிருக்காது. அதாவது சூரியனின் “மேற்பரப்பிற்கு” வெறும் 6.1 மில்லியன் கிலோமீட்டர் அல்லது 3.8 மில்லியன் மைல்கள் தொலைவுக்குச் சென்றிருக்காது.

“நாம் அடிப்படையில் கிட்டத்தட்ட







ஒரு நட்சத்திரத்தில் இறங்குகிறோம்,” என்று பார்க்கர் திட்ட விஞ்ஞானி டாக்டர் நூர் ரவுவாஃபி கூறினார்.

“இது மனித இனத்திற்கும் ஒரு மகத்தான சாதனையாக இருக்கும். இது 1969ஆம் ஆண்டு நிலவில் இறங்கியதற்குச் சமம்” என்று ஜான்ஸ் ஹாப்கின்ஸ் பல்கலைக்கழக பயன்பாட்டு இயற்பியல் ஆய்வக விஞ்ஞானி பிபிசி செய்தியிடம் கூறினார்.

சூரியனின் ஈர்ப்பு விசை காரணமாக அங்கே பார்க்கர் விண்கலம் விழும்போது அதன் வேகம் அபரிமிதமான ஈர்ப்பு விசையால் உருவாகும். இது நியூயார்க்கில் இருந்து லண்டனுக்கு 30 விநாடிகளுக்குள் பறந்து செல்வதற்கு ஒப்பானது.

அமெரிக்க விண்வெளி ஏஜென்சியான நாசாவின் ‘பார்க்கர் சோலார் ப்ரோப்’ இதுவரை மேற்கொள்ளப்பட்ட மிக துணிச்சலான திட்டங்களில் ஒன்று.

இந்தத் திட்டம் 2018இல் தொடங்கப்பட்டது. இது சூரியனுக்கு மிக அருகில் செல்லும் முயற்சிகளை இலக்கைக் கொண்டுள்ளது.

‘பார்க்கர்’ விண்கலம் 2024இன் பிற்பகுதியில் சூரியனுக்கும் பூமிக்கும் இடையே உள்ள தூரத்தில் (149 மில்லியன் கிமீஃ93 மில்லியன் மைல்கள்) வெறும் 4 வீதம் மட்டுமே கடக்க வேண்டியிருக்கும்.

சூரியனுக்கு அவ்வளவு நெருக்கமாகச் செல்ல பார்க்கர் விண்கலம் எதிர்கொள்ளும் சவால் மிகப் பெரியதாக இருக்கும். அப்போது பெரிஹேலியனில், விண்கலத்தின் முன்பகுதியில் உள்ள வெப்பநிலை 1,400 செல்ஷியஸை அடையும்.

தடிமனான வெப்ப கவசத்திற்குப் பின்னால் இருந்து பயன்படுத்தப்படும் கருவிகளின் தொகுப்பைக் கொண்டு சூரியனின் சூழலை அளவீடு செய்வதே பார்க்கரின் உத்தி.

இதன் பயனாக, சூரியனில் என்ன நடக்கிறது என்பது குறித்து சில முக்கிய தகவல்களைப் பற்றிய எதிர்பாராத அளவுக்குப் புதிய விவரங்களைத் தெரிந்துகொள்ள முடியும் என்று ஆராய்ச்சியாளர்கள் நம்புகின்றனர்.





இவற்றில் முதன்மையானது, சூரியனின் வெளிப்புற வளிமண்டலமான கரோனாவின் செயல்பாடுகள் பற்றிய தெளிவான விளக்கமாகும்.

எதிர்-உள்ளுணர்வு சூப்பர் ஹீட்டிங் போலத் தோன்றுவதை இது அனுபவிக்கிறது. சூரியனின் ஒளிக்கோளத்தில், மேற்பரப்பின் வெப்பநிலை தோராயமாக 6,000 செல்ஷியஸ். ஆனால் கரோனாவுக்குள் அது ஒரு மில்லியன் டிகிரி மற்றும் அதற்கும் அதிகமாக இருக்கும்.

நட்சத்திரத்தின் அணுக்கரு மையத்தில் இருந்து தொலைவில் வெப்பநிலை குறையும் என்று நீங்கள் நினைக்கலாம்.

மின்னூட்டம் கொண்ட துகள்களின் வெளிப்புற ஓட்டம் - எலக்ட்ரான், புரோட்டான் மற்றும் கனமான அயனிகள் - திடீரென்று விநாடிக்கு 400 கி.மீ வேகத்தில் நகரும் சூப்பர் சோனிக் காற்றாற்றலாக முடுக்கி விடப்படுவதும் கரோனா பகுதிக்குள்தான்.

விஞ்ஞானிகளால் இதை இன்னும் முழுமையாக விளக்க முடியவில்லை. ஆனால் சூரியனின் தன்மை மற்றும் “விண்வெளி வானிலை” நிகழ்வின் முன்னறிவிப்புகளை மேம்படுத்துவதற்கு இது மிகவும் முக்கியமானது.

மற்றொன்று, சூரியனில் இருந்து வரும் துகள்கள் மற்றும் காந்தப்புலங்களின் சக்தி வாய்ந்த வெடிப்புகளைக் குறிக்கிறது. அவை பூமியில் உள்ள தகவல் தொடர்புகளைச் சீர்குலைப்பது மட்டுமின்றி மின் கட்டமைப்புகளைக் கூட தகர்க்கலாம். விண்வெளி வீரர்களுக்கு இது போன்ற கதிர்வீச்சு உடல்நல அபாயங்களையும் ஏற்படுத்துகிறது.

“இது ஒரு புதிய பரிமாணத்தைப் பெறுகிறது. குறிப்பாக இப்போது நாங்கள் மனிதர்களை மீண்டும் சந்திரனுக்கு அனுப்பவும், சந்திர மேற்பரப்பில் நிரந்தர முகாமை அமைக்கவும் யோசித்து வருகிறோம்,” என்று டாக்டர் ரவுவாஃபி கூறினார்.

**சுட்டெரிக்கும் சூரியனை தொட்டுப் பார்க்க தயாராகும் நாசா**

பார்க்கர் விண்கலம் வெள்ளிக்கிழமை சூரியனை மிக அருகில் நெருங்கும் முயற்சிகளில் ஒன்றை மேற்கொண்டது. அதன் சுற்றுப்பாதையை வளைத்து நவம்பர் மாதத்துக்கு முன் வீனஸை சுற்றி வந்து சூரியனை மிக நெருக்கமாகத் தொட அடுத்த ஆண்டு மேலும் மூன்று முயற்சிகள் மேற்கொள்ளப்படும். இப்படி 2024 டிசம்பரில் ஒரு வரலாற்று நிகழ்வை பார்க்கர் ஏற்படுத்தும்.

நாசாவில் அறிவியல் துறையின் தலைவராக டாக்டர் நிக்கி ஃபாக்ஸ் பணியாற்றுகிறார். அவர் தனது தற்போதைய பொறுப்புக்கு வந்ததற்கு முன்பாக பார்க்கர் திட்டத்தின் முன்னணி விஞ்ஞானியாக இருந்தார்.

டிசம்பர் 2024இல் பார்க்கர் விண்கலம் நிகழ்த்தும் இந்த நிகழ்வின் முக்கிய நன்மை என்னவென்றால், சூரியனின் கரோனாவில் மிக அதிக நேரம் அது இருக்கப் போகிறது. இதற்கு முன் இல்லாததைவிட அந்தக் காலகட்டம் அதிகமாக இருக்கும் என்று அவர் கூறினார்.

“நாங்கள் எதைக் கண்டுபிடிப்போம் என்று எங்களுக்குத் தெரியாது. ஆனால் வெப்பத்துடன் தொடர்புடைய சூரியக் காற்று ஆற்றலில் அலைகளைத் தேடுவோம்,” என்று அவர் செய்தியாளரிடம் கூறினார்.

‘பல ஆண்டுகளாக மக்கள் வாதிடும் செயல்முறைகளின் கலவையைச் சுட்டிக் காட்டும் பல்வேறு வகையான அலைகளை நாங்கள் உணர்வோம் என்று நான் நம்புகிறேன்.”

இந்த 2024ஆம் ஆண்டு பார்க்கருடைய பணியின் உச்சமாக இருக்கும் டிசம்பர் மாதத்திற்குப் பிறகு அது சூரியனை நெருங்க முடியாது. ஏனென்றால் அதன் சுற்றுப்பாதை வீனஸை சுற்றியே இருந்து சூரியனை நோக்கி இன்னும் தெளிவான பாதையில் பயணிக்கக் கற்றுக்கொள்ளும். அதோடு வேறு பல காரணங்களும் உள்ளன.

ஆனால் சூரியனுக்கு மிக அருகில் செல்வது, பார்க்கரின் பெரிய நோக்கத்தின் நிழலைச் சுருக்கி, விண்கலத்தின் பின்புறத்தைத் தாங்க முடியாத வெப்பநிலைக்கு உட்படுத்தும் அபாயமும் ஏற்படலாம்.

# உலகில் அமெரிக்க ஆதிக்கம் பலவீனம் அடைகிறதா?

பிராங்க் கார்ட்னர்

## உக்ரைன் போர் மூலம் புடின் உணர்த்தியது என்ன?

சர்வதேச அரசியல் அரங்கில், அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் பிற முக்கிய ஜனநாயக நாடுகள் கடந்த 12 மாதங்களில் பல பின்னடைவுகளைச் சந்தித்துள்ளன.

இவை எதுவும் பேரழிவை ஏற்படுத்தவில்லை என்றாலும், பல ஆண்டுகளாக ஆதிக்கம் செலுத்தி வரும் அமெரிக்க மேலாதிக்க மேற்கத்திய மதிப்புகளிலிருந்து மாறிவரும் உலக சமநிலையை அவை சுட்டிக்காட்டுகின்றன.



கருங்கடலில் சில சமீபத்திய வெற்றிகள் இருந்த போதிலும், போர் என்பதை எடுத்துக்கொண்டால் அது உக்ரேன் போரைப் பொருத்தளவில் அமெரிக்காவின் எதிர்பார்ப்புகள் நிறைவேறவில்லை என்றே நம்பப்படுகிறது.

அதாவது உக்ரேனின் போர் முயற்சிக்கும் அதன் பொருளாதாரத்திற்கும் பில்லியன்கணக்கான டாலர்களை வழங்கிய நேட்டோ மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கு இது மோசமான விளைவாக இருக்கும்.

கடந்த ஆண்டு இதேநேரத்தில், நவீன ராணுவ உபகரணங்கள் மற்றும் தீவிர பயிற்சிகளின் மூலம் உக்ரேனிய ராணுவம் மீண்டும் முன்னிலை பெற முடியும் என்று நேட்டோ அதிக நம்பிக்கை கொண்டிருந்தது.

ரஷ்யர்களால் கைப்பற்றப்பட்ட பெரும்பாலான பகுதிகளிலிருந்து அவர்களை வெளியேற்ற முடியும் என்ற நம்பிக்கையும் மேலோங்கியிருந்தது. ஆனால் இது நடக்கவில்லை.

இங்கே திட்டமிடல் தான் பிரச்னையாக உள்ளது. பிரிட்டனின் சேலஞ்சர் 2 மற்றும் ஜெர்மனியின் லெப்பார்ட் 2 போன்ற நவீன போர் டாங்கிகளை உக்ரேனுக்கு அனுப்பத் துணிய முடியுமா? அது அதிபர் விளாடிமிர் புடினை அவசரமாகப் பதிலளிக்கத் தூண்டுமா? என்று நேட்டோ நாடுகள் யோசிக்க நீண்ட காலம் எடுத்தன.

**உக்ரேனின் ரஷ்ய எதிர்ப்புத் தாக்குதல் தோல்வி**

இறுதியில், மேற்கு நாடுகள் டாங்கிகளை வழங்கின. ஆனால் ரஷ்ய அதிபர் புடின் எதுவும் செய்யவில்லை. இருப்பினும் ஜூன் மாதத்தில் அந்த டாங்கிகளை அவர்கள் போர்க்களத்தில் நிலைநிறுத்தத் தயாராக இருந்த நேரத்தில், ரஷ்ய தளபதிகள் வரைபடங்களைப் பார்த்து, முக்கிய உக்ரேனிய போர் நடவடிக்கைகள் எங்கு மேற்கொள்ளப்படும் என்பது பற்றிய துல்லியமான முடிவுகளை எடுத்தனர்.

உக்ரேன் தெற்கே ஜபோரிஷியா பகுதி வழியாக அசோவ் கடலை நோக்கி நகர்ந்து, ரஷ்ய முன்கள படையணியை உடைத்து, அதை இரண்டாகப் பிரித்து, கிரைமியாவை இணைக்க விரும்புவதாக அவர்கள் கண்டுபிடித்தனர்.

2022இல் தலைநகர் கிய்வைக் கைப்பற்றுவதற்கான முயற்சிகளில் ரஷ்ய ராணுவம் ஏமாற்றம் அடைந்திருக்கலாம். ஆனால் அது எங்கெல்லாம் சிறந்து விளங்கமுடியுமோ, அங்கெல்லாம் தன் முழுமையான வலிமையைக் காட்டியது.

2023 ஆம் ஆண்டின் முதல் பாதியில், உக்ரேனிய படைப்பிரிவுகள் பிரிட்டனிலும் பிற இடங்களிலும் பயிற்சி பெற்று, கிழக்கு நோக்கி டாங்கிகளுடன் அனுப்பப்பட்ட போது, ரஷ்யா நவீன வரலாற்றில் மிகப்பெரிய மற்றும் மிக விரிவான தற்காப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டது.

டாங்கி எதிர்ப்பு கண்ணிவெடிகள், சுரங்கங்கள், ராணுவ எதிர்ப்பு கண்ணிவெடிகள், பதுங்கு குழிகள், அகழிகள், ஆளில்லா விமானங்கள் மற்றும் பீரங்கிகள் இணைந்து உக்ரேனின் திட்டத்தை முறியடித்தன. உக்ரேனால் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட ரஷ்ய எதிர்ப்புத் தாக்குதல் தோல்வியடைந்தது.

**புடின் சாதித்தது என்ன?**

உக்ரேனில் வெடிமருந்துகள் மற்றும் ராணுவ வீரர்களுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. 60 பில்லியன் டாலர் ராணுவ உதவிகளை அளிக்கும் வெள்ளை மாளிகையின் முயற்சிகளை அமெரிக்க நாடாளுமன்றம் தடுக்கிறது. ஐரோப்பிய ஒன்றியத்தின் 50 பில்லியன் யூரோ உதவிகளை ஹங்கேரி நிறுத்தி வைத்துள்ளது.

இறுதியில் ஒருவரோ அல்லது இருவரும் கூட வெற்றி பெறலாம், ஆனால் அதற்குள் அந்த வெற்றி மிகவும் தாமதமாகலாம். உக்ரேன் ராணுவம் ஏற்கனவே தற்காப்பு நிலையில் உள்ளது. இதற்கிடையில், ரஷ்யா தனது பொருளாதாரத்தை போர்க்கால அடிப்படையில் வைத்துள்ளது.


அது தனது தேசிய பட்ஜெட்டில் மூன்றில் ஒரு பங்கை பாதுகாப்பிற்காக ஒதுக்கியுள்ளது. உக்ரேனின் முக்கிய பகுதிகளில் ஆயிரக்கணக்கான பீரங்கி குண்டுகள் மூலம் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

வெளிப்படையாக, இந்த நிலைமை உக்ரேனுக்கு மிகவும் ஏமாற்றம் அளிக்கிறது. அப்போது போரின் அலை தனக்கு சாதகமாக மாறும் என்று அது நம்பியது. ஆனால் அது மேற்குலக நாடுகளுக்கு ஏன் முக்கியம்?

ஏறக்குறைய இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு தனிப்பட்ட முறையில் தாக்குதலுக்கு உத்தரவிட்ட ரஷ்ய அதிபர் புடினுக்கு இது புரியும்.

வெற்றியை அறிவிக்க அவர்கள் செய்ய வேண்டியதெல்லாம், அவர்கள் கைப்பற்றிய, உக்ரேன் நாட்டின் சுமார் 18 சதவிகித பிரதேசத்தைத் தொடர்ந்து கட்டுப்பாட்டில் வைத்திருப்பது தான்.

நேட்டோ தனது ஆயுதக் களஞ்சியத்தை காலி செய்







துள்ளது. அதன் நட்பு நாடான உக்ரேனை ஆதரிப்பதற்காக போரில் ஈடுபடுவதைத் தவிர்க்க அது தன்னால் இயன்றவரை முயன்றுள்ளது.

இதற்கிடையில், பால்டிக் நாடுகளான எஸ்டோனியா, லாட்வியா, லிதுவேனியா மற்றும் அனைத்து நேட்டோ உறுப்பினர்களும், யுக்ரேனில் புடின் வெற்றி பெற்றால், அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குள் அவர் தன்னுடைய கொள்கைகளை அப்படியே பின்பற்றுவார் என்று உறுதியாக நம்புகின்றன.

**உக்ரேன் போர் மூலம் புடின் உணர்த்தியது என்ன?**

கோட்பாட்டு அளவில் சொல்வதென்றால் ரஷ்ய அதிபர் புடின் ஒரு தேடப்படும் நபர்.

மார்ச் 2023 இல், நெதர்லாந்து நாட்டின் ஹேக் நகரில் உள்ள சர்வதேச குற்றவியல் நீதிமன்றம், உக்ரேனில் ரஷ்யா குழந்தைகளுக்கு எதிரான போர்க் குற்றங்களில் ஈடுபட்டதாக புடின், ரஷ்ய குழந்தைகள் நல உரிமை ஆணையர் மீதும் குற்றஞ்சாட்டியது.

இதனால் சர்வதேச அளவில் அதிபர் புடின் தீண்டத்தகாதவராக மாறிவிடுவார் என்று மேற்கத்திய நாடுகள்



எதிர்பார்த்தன.

அவருக்கு சொந்த நாட்டிலேயே எதிர்ப்பு அதிகரிக்கும் என்றும் வெளிநாடுகளுக்கு புடின் சென்றால் கைது நடவடிக்கையை மேற்கொள்ளலாம் என்றும் மேற்குலக நாடுகள் எதிர்பார்த்தன. ஆனால் இவற்றில் எதுவும் நடக்கவில்லை.

அந்த நீதிமன்றத் தீர்ப்புக்குப் பின்னர், அதிபர் புடின் கிர்கிஸ்தான், சீனா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மற்றும் சௌதி அரேபியா ஆகிய நாடுகளுக்குச் சென்றார். ஒவ்வொரு முறையும் அவருக்கு பிரமாண்ட வரவேற்பு அளிக்கப்பட்டது. தென்னாப்பிரிக்காவில் நடந்த பிரிக்ஸ் மாநாட்டிலும் அவர் கிட்டத்தட்ட பங்கேற்றார் என்பதே உண்மை.

ஐரோப்பிய ஒன்றியத் தடைகளால் ரஷ்யப் பொருளாதாரம் மண்டியிடும் என்றும் இது புதினைத் தனது தாக்குதலைத் திரும்பப்பெற வைக்கும் என்றும் நம்பப்பட்டது.

ஆனால் ரஷ்யா இந்த தடைகளை தாங்கி நிற்கும் என்று நிரூபிக்கப்பட்டுள்ளது. இது சீனா மற்றும் கஜகஸ்தான் போன்ற நாடுகள் மூலம் பல தயாரிப்புகளை உலக நாடுகளுக்கு வழங்குகிறது. உண்மை என்னவென்றால், மேற்குலக நாடுகள் ரஷ்யாவின் எண்ணெய் மற்றும் எரிவாயுவை வாங்குவதில் இருந்து பெரிதும் விலகியிருக்கின்றன. ஆனால் ரஷ்யா குறைந்த விலையில் இருந்தாலும், மற்ற தேவைப்படும் வாடிக்கையாளர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு அவற்றை விற்றுவருகிறது.

உக்ரேனில் புடினின் படையெடுப்பு மற்றும் ஆக்கிரமிப்பு மேற்குலக நாடுகளுக்கு வெறுக்கத்தக்கதாக உள்ளது. ஆனால் அது உலகின் பிற பகுதிகளில் அதேபோன்ற நிலையை ஏற்படுத்தவில்லை.

பல நாடுகள் இதை ஐரோப்பாவின் பிரச்னையாக பார்க்கின்றன. இதற்கு நேட்டோவை குற்றம் சாட்டும் சிலர், கிழக்கில் தனது எல்லையை மிக அதிகமாக விரிவுபடுத்தி ரஷ்யாவை தூண்டிவிட்டதாக விமர்சிக்கின்றனர்.

உக்ரேனியர்களுக்கு ஏமாற்றமளிக்கும் விஷயம் என்னவென்றால், ரஷ்ய வீரர்கள் செய்யும் பெரிய அளவிலான அட்டூழியங்கள் மற்றும் அத்துமீறல்கள் பற்றி இந்த நாடுகளுக்கு தெரியாது.

**மேற்குலகம் மீது பாயும் அரபு நாடுகள்**

சமீபத்தில் ரியாத்தில் நடந்த உச்சிமாநாட்டின் போது அரபு நாடுகளைச் சேர்ந்த அமைச்சர்கள் மேற்கத்திய நாடுகள் இரட்டைத் தரம் கொண்டவை என்று விமர்சித்தனர்.

இந்த மேற்கத்திய அரசுகள் போலித்தனமானவை என்றும் அப்போது பேசப்பட்டது. மேலும், "ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்படும் காஸாவில் போர் நிறுத்தத்தை இந்த அரசுகள் மறுக்கும் போது உக்ரேனில் பொதுமக்களைக் கொன்றதற்காக ரஷ்யாவை நாங்கள் கண்டிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்களா?" என்றும் இந்த நாடுகள் கேள்வி எழுப்பின.

இஸ்ரேல்-ஹமாஸ் போர், தெற்கு இஸ்ரேல் மீது ஹமாஸின் கொடிய அக்டோபர் 7 தாக்குதலால் பாதிக்கப்பட்ட அனைத்து காஸாவாசிகள் மற்றும் இஸ்ரேலியர்களுக்கு தெளிவாக பேரழிவை ஏற்படுத்தியது. இது மேற்குலகிற்கும் மோசமானதாகவே இருக்கிறது.

இந்த குளிர்காலத்தில் ரஷ்யாவின் முன்னேற்றத்தை தடுக்க போராடி வரும் நேட்டோ நட்பு நாடான உக்ரேனிடம் இருந்து உலகின் கவனத்தை இந்த போர் திசை திருப்பியுள்ளது. இது அமெரிக்க ஆயுதங்களை கிய்வில் இருந்து இஸ்ரேலை நோக்கி திருப்பியிருக்கிறது.

ஆனால் எல்லாவற்றிற்கும் மேலாக, பல முஸ்லிம்கள் மற்றும் உலகெங்கிலும் உள்ள மற்றவர்களின் பார்வையில், ஐக்கிய நாடுகள் சபையில் இஸ்ரேலைப் பாதுகாப்பதன் மூலம், அது அமெரிக்காவையும் பிரிட்டனையும் காஸாவின் அழிவுக்கு உடந்தையாக்கியுள்ளது.

அக்டோபர் 7 ஆம் தேதி சிரியாவில் உள்ள அலெப்போ நகரைக் குண்டுவீசி தாக்கியதில் இருந்து ரஷ்ய விமானப்

(16ம் பக்கம் பார்க்க)

# உலகில் அமெரிக்க ஆதிக்கம் பலவீனம்...

(15ம் பக்கத் தொடர்ச்சி)

படை மத்திய கிழக்கில் அதன் ஆதரவை அதிகரித்து வருகிறது.

போர் ஏற்கனவே தெற்கு செங்கடல் வரை பரவியுள்ளது. அங்கு இரான் ஆதரவு ஹூதி போராளிகள் வணிகக் கப்பல்களைத் தாக்குவதால், உலகின் முக்கிய கப்பல் நிறுவனங்கள் ஆப்பிரிக்காவின் தெற்கு முனையைச் சுற்றி தங்கள் பாதையை மாற்ற முயற்சிக்கும்போது எரிபொருட்களின் விலைகள் உயரும்.

**அதிகரிக்கும் ஈரானின் செல்வாக்கு**

ஈரான் அணு ஆயுதங்களை ரகசியமாக தயாரித்து வருவதாக பொதுவான சந்தேகங்கள் தொடர்கின்றன. இதை அந்நாட்டு அரசு மறுக்கிறது.

மேற்கத்திய நாடுகளின் முயற்சிகள் இருந்த போதிலும், அது தனிமைப்படுத்தப்படுவதில் இருந்து வெகு தொலைவில் உள்ளது. இது ஈராக், சிரியா, லெபனான், ஏமன் மற்றும் காஸாவில் தனது ராணுவ கூடாரங்களை பினாமி போராளிகள் மூலம் பரப்பியுள்ளது. அந்நாட்டு அரசு இந்த போராளிகளுக்கு பணம், பயிற்சி மற்றும் ஆயுதங்களை வழங்குகிறது.

இந்த ஆண்டு ஈரான் ரஷ்யாவுடன் நெருக்கமான கூட்டணியை உருவாக்கியுள்ளது. உக்ரேனிய நகரங்கள் மீது ஏவுவதற்காக ஷஹீத் ட்ரோன்களை ரஷ்யாவிற்கு அது தொடர்ந்து வழங்கி வருகிறது.

பல மேற்கத்திய நாடுகளால் அச்சுறுத்தலாக உணரப்பட்ட போதிலும், மத்திய கிழக்கில் பாலத்தீனத்தின் அனுதாபியாக தன்னை நிலைநிறுத்திக் கொண்டு காஸா போரினால் ஈரான் பலனடைந்துள்ளது.

**ஆப்ரிக்காவிலும் காலூன்றும் ரஷ்யா**

மேற்கு ஆப்பிரிக்காவின் சஹேல் பகுதியில் இருக்கும் நாடுகள் ஒவ்வொன்றாக ராணுவப் புரட்சிக்கு பலியாகி வருகின்றன.

இப்பகுதியில் ஜிஹாதி கிளர்ச்சியை சமாளிக்க உதவிய ஐரோப்பிய படைகள் புறக்கணிக்கப்பட்டதால் தான் இது போன்ற நிலை ஏற்பட்டுள்ளது.

மாலி, பர்கினா ஃபாசோ மற்றும் மத்திய ஆபிரிக்க குடியரசு ஆகியவற்றின் முன்னாள் பிரெஞ்சு காலனிகள் ஏற்கனவே ஐரோப்பியர்களுக்கு எதிராக திரும்பியுள்ளன. நைஜர் ஜூலை மாதம் ஒரு சதித் திட்டத்தை எதிர்கொண்டதைத் தொடர்ந்து மேற்கத்திய சார்பு அதிபரை வெளியேற்றியுள்ளது.

கடைசியாக மீதமிருந்த பிரான்ஸ் ராணுவத்தினரும் இப்போது நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். இருப்பினும் 600 அமெரிக்க வீரர்கள் இன்னும் அங்கே இரண்டு தளங்களில் உள்ளனர்.

பிரான்ஸ் மற்றும் சர்வதேசப் படைகள் இருந்த இடங்கள் அனைத்தும் ரஷ்ய கூலிப்படையினரைக் கொண்டு நிரப்பப்படுகின்றன. வாக்னர் குழு, ஆகஸ்ட் மாதம் விமான விபத்தில் தங்கள் தலைவர் யெவ்ஜெனி ப்ரிகோஜின் மர்மமான முறையில் இறந்த போதிலும் தங்கள் லாபகரமான வணிக ஒப்பந்தங்களைத் தக்க வைத்துக் கொள்ள முடிந்தது.

இதற்கிடையில், ஒரு காலத்தில் மேற்குலக நாடுகளின் நட்பு நாடாக கருதப்பட்ட தென்னாப்பிரிக்கா, ரஷ்ய மற்றும் சீன போர்க் கப்பல்களுடன் கூட்டு கடற்படை பயிற்சிகளை நடத்தி வருகிறது.

வட கொரியாவின் ஜனநாயக மக்கள் குடியரசு அதன் தடைசெய்யப்பட்ட அணு ஆயுதங்கள் மற்றும் பாலிஸ்டிக் ஏவுகணைத் திட்டம் காரணமாக கடுமையான சர்வதேச தடைகளுக்கு உட்பட்டுள்ளதாக நம்பப்படுகிறது.

இருந்த போதிலும், கடந்த ஆண்டிலிருந்து ரஷ்யாவுடன் நெருக்கமான உறவைப் பேணி வருகிறது. கடந்த ஆண்டில் வடகொரிய அதிபர் கிம் ஜாங் உன் ரஷ்ய துறைமுக நகருக்கு பயணம் மேற்கொண்டார்.

இதற்குப் பிறகு, உக்ரேனில் சண்டையிடும் ரஷ்யப் படைகளுக்கு வடகொரியா பத்து லட்சம் பீரங்கி குண்டுகளை அனுப்பியதாகக் கூறப்படுகிறது.

வட கொரியா பல கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளை பரிசோதித்துள்ளது. அவை இப்போது அமெரிக்காவின் பெரும்பாலான நகரங்களை அடையும் திறன் கொண்டவை என நம்பப்படுகிறது.

2023 ஆம் ஆண்டு அமெரிக்கா - சீனா ஆகிய இரு நாடுகளுக்கும் இடையிலான பதற்றம் ஓரளவிற்கு குறைக்கப்பட்டது. சான் பிரான்சிஸ்கோவில் அமெரிக்க அதிபர் ஜோ பைடனுக்கும் சீன அதிபர் ஷி ஜின்பிங்கிற்கும் இடையே வெற்றிகரமாக உச்சிமாநாடு நடைபெற்றது.

ஆனால் தென் சீனக் கடலின் பெரும்பகுதி மீதான உரிமை கோரலில் இருந்து சீனா பின்வாங்குவதற்கான எந்த அறிகுறியையும் காட்டவில்லை.

சீனா ஒரு புதிய நிலையான வரைபடத்தை வெளியிட்டுள்ளது. இந்த வரைபடம் பல ஆசிய-பசிபிக் நாடுகளின் கடற்கரைகளையும் உரிமை கோரும் வகையில் அமைந்துள்ளது.

தாய்வான் மீதான உரிமையைக் கூட அது இன்னும் கைவிடவில்லை. தேவைப்பட்டால், தாய்வானை வலுக்கட்டாயமாக இணைத்துக் கொள்ளப் போவதாகவும் சீனா ஏற்கெனவே சபதம் மேற்கொண்டுள்ளது. தற்போதைய நிலையில் தாய்வானில் பொது வாக்கெடுப்பு நடத்த சீனா அழுத்தம் கொடுத்து வருகிறது.

**நம்பிக்கைக்கு என்ன காரணம்?**

இது போன்ற ஒரு இருண்ட பின்னணியில் நம்பிக்கைக்கான வாய்ப்புகளைப் பார்ப்பது மேற்கத்திய நாடுகளுக்கு கடினமாக இருக்கலாம். ஆனால் அவர்களுக்கு சாதகமான அம்சம் என்னவென்றால், உக்ரேன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பால் ஈர்க்கப்பட்ட நேட்டோ கூட்டணி, அதன் தற்காப்பு நோக்கத்தை தெளிவாக மீண்டும் கண்டுபிடித்துள்ளது.

தற்போது சில விரிசல்கள் தென்பட்டாலும் மேற்குலகம் இதுவரையில் காட்டிய ஒருமித்த கருத்து பலரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.

ஆனால் மத்திய கிழக்கில் தான் முன்னேற்றத்திற்கான சாத்தியக்கூறுகள் அதிகம். காஸா-இஸ்ரேல் எல்லையின் இருபுறமும் நடந்த பயங்கரமான நிகழ்வுகளின் காரணமாக நேரிட்ட விளைவுகளில் இது ஒரு பகுதியாகும்.

அக்டோபர் 7 க்கு முன், எதிர்கால பாலத்தீன நாடு பற்றிய கேள்வியின் தீர்வுக்கான தேடல் பெரும்பாலும் கைவிடப்பட்டது.

பாலத்தீனர்களை இஸ்ரேல் கையாள்வதில் ஒருவித மனநிறைவு இருந்தது. இது எப்படியாவது பாதுகாப்பு ராஜதந்திர நடவடிக்கைகளின் மூலம் தீர்க்கப்படக்கூடிய ஒரு பிரச்னை. அவர்களுக்கு அவர்களின் சொந்த அரசைக் கொடுப்பதில் எந்த தீவிர நடவடிக்கையும் எடுக்கவில்லை.

அந்த உத்தி இப்போது அபாயகரமான தவறு என்று நிரூபிக்கப்பட்டுள்ளது. பாலத்தீனம் என்ற ஒரு நாடு உருவாகாவிட்டால் இஸ்ரேலியர்கள் எப்போதும் அமைதியாகவும், பாதுகாப்பாகவும் வாழ முடியாது என்று உலகத் தலைவர்கள் ஒருவர் பின் ஒருவராக அறிவித்து வருகின்றனர்.

வரலாற்றில் ஒரு பிரச்னைக்கு பொருத்தமான மற்றும் நிலையான தீர்வைக் கண்டுபிடிப்பது நம்பமுடியாத அளவிற்கு கடினமாக இருக்கும். அந்தத் தீர்வை எட்ட, இரு தரப்பிலும் வலிமிகுந்த சமரசங்களையும் தியாகங்களையும் உள்ளடக்கிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இப்போது இறுதியாக உலகமே இதில் கவனம் செலுத்திவருகிறது.

